# திருக்கோயில்




ஆகஸ்ட்
2002

விலை
ரூ 7.00

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் திருவேற்காட்டில் இந்துசமய அறநிலைய ஆட்சித்துறையின் சார்பில் 14.7.2002 அன்று 1008 இலவசத் திருமணங்களை மிகச் சிறப்பாக நடத்தி வைத்தார்கள். மாண்புமிகு இந்துசமய அறநிலைய ஆட்சித்துறை அமைச்சர் திருமிகு பி.சி. இராமசாமி அவர்கள் இத்திருமண விழாவிற்குத் தலைமைதாங்கினார்கள். அறநிலையத் துறையின் அரசுச் செயலாளர் திருமிகு பி.ஏ. இராமையா, இ.ஆ.ப. அவர்கள் வரவேற்புரை ஆற்றினார்கள். அறநிலையத்துறையின் சிறப்பு ஆணையர் மற்றும் ஆணையர் திருமிகு எம்.ஏ. கௌரிசங்கர் , இ.ஆ.ப. அவர்கள் நன்றியுரை ஆற்றினார்கள்.

# ஸ்ரீரங்க்கோயில்



ஆகஸ்ட்
2002

விலை
ரூ 7.00



மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் திருவேற்காட்டில் இந்துசமய அறநிலைய ஆட்சித்துறையின் சார்பில் 14.7.2002 அன்று 1008 இலவசத் திருமணங்களை மிகச் சிறப்பாக நடத்தி வைத்தார்கள். மாண்புமிகு இந்துசமய அறநிலைய ஆட்சித்துறை அமைச்சர் திருமிகு பி.சி. இராமசாமி அவர்கள் இத்திருமண விழாவிற்குத் தலைமைதாங்கினார்கள். அறநிலையத் துறையின் அரசுச் செயலாளர் திருமிகு பி.ஏ. இராமையா, இ.ஆ.ப. அவர்கள் வரவேற்புரை ஆற்றினார்கள். அறநிலையத்துறையின் சிறப்பு ஆணையர் மற்றும் ஆணையர் திருமிகு எம்.ஏ. கௌரிசங்கர், இ.ஆ.ப. அவர்கள் நன்றியுரை ஆற்றினார்கள்.



# திருக்கோயில்



திங்கள் இதழ்

தனி இதழ் : ரூ. 7.00

ஆண்டு உறுப்பினர் கட்டணம் : ரூ. 75.00

ஆயுள் உறுப்பினர் கட்டணம் : ரூ. 1000.00


| மாலை | | சித்ரபானு - ஆடி | மணி |
|---|---|---|---|
| 44 | திருவள்ளுவர் ஆண்டு 2033 | ஆகஸ்ட் 2002 | 8 |



### சிறப்பாசிரியர்

**திருமிகு எம்.ஏ. கௌரிசங்கர், இ.ஆ.ப.**
சிறப்பு ஆணையாளர் மற்றும் ஆணையாளர்

### ஆசிரியர்

**முனைவர் த. அமிர்தலிங்கம்,**
எம்.ஏ., பி.எச்.டி.

### ''திருக்கோயில்'' நிர்வாகக் குழுவினர்

**திருமிகு எஸ். கனகய்யா,** பி.எஸ்சி., பிஎல்.
கூடுதல் ஆணையாளர்

**திருமிகு ப. தனபால்,** எம்.ஏ., பி.எல்.
இணை ஆணையாளர் , தலைமை இடம்

**திருமிகு ஆ. குப்புசாமி,** பி.ஏ. பி.எல்.
ஆணையாளரின் நேர்முக உதவியாளர்

**திருமிகு கே.கே. இராஜா,** எம்.ஏ., பி.எல்.
இணை ஆணையாளர் - செயல் அலுவலர்
அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி
திருக்கோயில், பழநி.


<u>முகப்பு</u>

**திருவல்லிக்கேணி ஸ்ரீபார்த்தசாரதி திருக்கோயிலில் எழுந்தருளியுள்ள ஸ்ரீபார்த்தசாரதி ஸ்ரீஅழகிய சிங்கர் ஸ்ரீகஜேந்திரவரதர் ஸ்ரீராமர் ஸ்ரீரங்கநாதர் ஆகிய எம்பெருமான்கள் ஐவர்.**

## பொருளடக்கம்


**மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் திருவேற்காட்டில் இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் சார்பில் 14.7.2002 அன்று 1008 இலவசத் திருமணங்களை நடத்திவைத்து ஆற்றிய சிறப்புரை**

**மங்கையர்க்குத் தனி அரசி எங்கள் தெய்வம்** - முனைவர் த. அமிர்தலிங்கம்

**இராமராஜ்யம்** - கலைமாமணி மா. இலட்சுமணன்

**திருஅல்லிக்கேணியும், ஸ்ரீபார்த்தசாரதி சுவாமியும்** - த. காவேரி

**இளையாழ்வாரைக் காத்த பேரருளாளன்** - புலவர் ஏ. பரந்தாமன்

**சிவமாலை** - டாக்டர் சிவப்பிரியா

**லிங்கத்திலே திருமேனிகள்** - டாக்டர் டி. செல்வராஜ்

**அழகுக்கு மறுபெயர் முருகன்** - டாக்டர் கிருஷ்ணவேணி அருணாச்சலம்

**வாழவைக்கும் எங்கள் முத்துமாரி** - திருமதி உமா சுப்பிரமணியன்

**அதுவே, அதுவானது** - ஆன்ம சக்தி வெங்கடேசன்

**காப்பதும், கொடுப்பதும் மந்திரமே** - கவிஞர் சொக்கலிங்கம்

**பூலோக வைகுண்ட கைலாசம்** - தமிழ் தீபம் வெங்கடாசலம்





உறுப்பினர் கட்டணம் அனுப்ப வேண்டிய முகவரி :


உயர்திரு ஆணையாளர் அவர்கள்

***திருக்கோயில்***

இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை

*119,* உத்தமர் காந்தி சாலை, சென்னை - *600 034.*

தொலைபேசி : *8279407*

# மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் திருவேற்காட்டில் இந்துசமய அறநிலைய ஆட்சித்துறையின் சார்பில் 14.7.2002 அன்று 1008 இலவசத் திருமணங்களை நடத்தி வைத்து ஆற்றிய சிறப்புரை

பெரும் எண்ணிக்கையிலான அதாவது 1,008 இலவசத் திருமணங்கள் நடந்தேறிய இந்த நிகழ்ச்சி அன்னை தேவி கருமாரி அம்மன் அருளால் இன்று இந்த திருவேற்காடு திருத்தலத்தில் இனிதே நடைபெற்று உள்ளது. இந்தத் திருமணங்களை ஒரு சேர நடத்தி வைத்ததில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

நமது நாட்டின் கலை, பண்பாடு, சமூக வரலாறு தொன்மை ஆகியவற்றின் கருவூலங்களாக நமது நாட்டின் திருக்கோவில்கள் திகழ்ந்து வருகின்றன. நமது ஆலயங்கள் ஒரு வகையில் நமக்கு சமத்துவத்தைப் போதிக்கின்றன. சமுதாயத்தில் நலிவு அடைந்த ஏழை - எளிய மக்களுக்கு ஆலயங்கள் ஒரு புகலிடமாகவும் திகழ்ந்து வருகின்றன. அந்த வகையில் தமிழகத்தில் உள்ள வசதி மிக்க திருக்கோவில்களின் ஆதரவில் நடைபெறும் இலவசத் திருமணங்கள் ஆலயங்களில் தொன்று தொட்டு நிலவி வரும் சமூக நீதிக்கு ஒரு எடுத்துக்காட்டாகத் திகழ்கின்றன.

இங்கே மணம் புரிந்து கொண்டுள்ள மணமக்கள் ''எந்த சாதி'', ''எந்த இனம்'' என்று யாரும் பார்க்கவில்லை. அவர்கள் அனைவரும் ''மனித சாதி''யைச் சேர்ந்தவர்கள் என்ற வகையில் ஒருங்கிணைக்கப்பட்டு, இந்த 1,008 திருமணங்கள் ஒருசேர வண்ண மிகு நிகழ்ச்சியாக நடந்துள்ளன.

சமுதாயத்தின் நலிவடைந்த பிரிவைச் சேர்ந்த குடும்பங்களிலும், ஏழை எளிய குடும்பங்களிலும், திருமணப் பருவத்தை எய்திய பெண்களுக்குத் திருமணம் செய்து வைப்பது என்பது இன்னும் கூட ஒரு சிரமமான காரியமாக இருக்கிறது.

அவர்களுக்கு உதவிட வேண்டும் என்ற நோக்கத்துடனும், அத்தகைய திருமணங்கள் வசதி இல்லையே என்ற காரணத்தினால் நின்று போவதைத் தவிர்த்திட வேண்டும் என்ற எண்ணத்துடனும் திருக்கோவில்களில் குறைந்த செல்வில் எளிய முறையில் திருமணங்கள் நடத்தப்பட வேண்டும் என்ற இந்தத்திட்டம் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆரால் உருவாக்கப்பட்டது.

இந்த திட்டம் ஆரம்பிக்கப்பட்டபோது ஒரு திருமணத்திற்கு 1000 ரூபாய் வீதம் செலவு செய்ய திருக்கோவில்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டது. பின்னர் அந்த செலவுத் தொகை படிப்படியாக அதிகரிக்கப்பட்டு தற்போது எனது ஆட்சிக்காலத்தில், ஒரு திருமணத்திற்கு 4 ஆயிரத்து 500 ரூபாய் வீதம் செலவு செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளது.

ஏழை பெண்களுக்கான திருமணத்திட்டம் என்பது ஏற்கனவே உள்ளதுதான். ஆனால் அந்த திருமணங்கள் பல்வேறு இடங்களில் தனித்தனியாக நடைபெற்றன. அவற்றை ஒரு முகப்படுத்தி ஒரே இடத்தில் நடத்தினால் பொருட் செலவு, கால விரயம் ஆகியவற்றைத் தவிர்க்கலாம், மேலும் அப்படி செய்வது மணமக்களின் பெற்றோர்களுக்கும் வசதியாக இருக்கும் என்ற எண்ணத்தில் இந்த திருவேற்காடு திருத்தலத்தில் ஒரே இடத்தில் 1,008 ஜோடி மணமக்களுக்கு திருமணங்கள் நடத்தி வைக்கப்பட்டுள்ளன.

1,008 ஜோடி மணமக்களுக்கு திருமணங்கள் நடத்தப்படுகிறது என்றால் 1,008 ஏழை எளிய பெண்களின் வாழ்க்கையில் இன்று ஒளிவிளக்கு ஏற்றி வைக்கப்பட்டுள்ளது என்றுதானே பொருள்?

இது சமூகப்பணி என்றால் - ஆம் - இது சமூகப் பணிதான்.

இது ஆன்மீகப்பணி என்றால் - ஆம் - இது ஆன்மீகப்பணிதான்.

என்னைப் பொறுத்தவரை இவை இரண்டிற்கும் வேறுபாடு இல்லை.

மக்கள் தீர்ப்பே மகேசன் தீர்ப்பு என்றால் -

மக்கள் பணி தானே மகேசன் பணி?

நான் ஆட்சிப் பொறுப்பை ஏற்றது முதல் தொன்மைச் சிறப்பு வாய்ந்த நமது ஆலயங்களை முறையாகப் பராமரிப்பதற்காக பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி இருக்கிறேன்.

## அருள்மிகு தேவி கருமாரியம்மன் திருக்கோயில்,
## திருவேற்காடு



# 1008 இலவசத் திருமண விழா

## அழைப்பிதழ்

நாள் : 14.7.2002
ஞாயிற்றுக்கிழமை

நேரம் : முற்பகல் 10.00 மணி முதல்
11.30 மணிக்குள்

இடம் : அருள்மிகு தேவி கருமாரியம்மன் திருக்கோயில் அருகில், திருவேற்காடு.

# 1008 திருமணங்களின் சிறப்பு

அண்டங்கள் ஆயிரத்தெட்டினைப் படைத்தும் காத்தும் இரட்சிப்பவள் ஆதிபராசக்தி. பராசக்திக்கு உகப்பானது 1008 திருநாம அர்ச்சனை. அன்னை பராசக்தியை 1008 அர்ச்சனை செய்து மகிழ்விப்பதைப் போல், ஏழை எளியவர்களுக்கு 1008 இலவசத் திருமணங்களை மகிழ்ச்சியுடன் நிறைவேற்றியுள்ளது நம் இந்துசமய அறநிலையத்துறை.

– இந்துசமய அறநிலைய ஆட்சித்துறையின்சிறப்பு ஆணையாளர்
**திருமிகு எம்.ஏ. கௌரிசங்கர்** அவர்கள் ஆற்றிய நன்றியுரையிலிருந்து.

நான் தமிழகத்தின் முதல் - அமைச்சராக 2002-ஆம் ஆண்டு மூன்றாம் முறையாகப் பொறுப்பு ஏற்றவுடன் திருக்கோவில்களுக்கு மதிய நேரத்தில் பசியோடு வரும் பக்தர்களின் பசியாற அன்னதானம் வழங்கும் அன்னதானத் திட்டத்தைத் தமிழகத்தில் தெரிவு செய்யப்பட்ட 63 திருக்கோவில்களில் நடை முறைப்படுத்த ஆணையிட்டேன்.

மேலும் பண்பாட்டுக் கருவூலங்களாகத் திகழும் நமது திருக்கோவில்களில் நல்ல பண்புகளும் நாட்டின் தொன்மைச் சிறப்பும் இளைய தலைமுறையினர் இடையே வளர்ப்பதற்கு திருக்கோவில்கள் பயன்பட வேண்டும் என்ற கருத்தை உள்ளடக்கி வாரந்தோறும் ஆன்மீகம் மற்றும் ஒழுக்க நெறிகளை கற்பிக்கும் வகுப்புகள் திருக்கோவில்களில் நடைபெற வேண்டும் எனவும் நான் ஆணையிட்டுள்ளேன்.

இப்படி ஆலயங்களின் வாயிலாக சமுதாயப் பணிகளைச் செய்வதில் நான் உள்ளபடியே மகிழ்ச்சி அடைகிறேன்.

பாடல் பெற்ற திருக்கோவில்களில் ஒன்றான திருவேற்காடு திருத்தலத்தில் இன்று மணவிழா காணும் மணமக்கள், உண்மையிலேயே கொடுத்து வைத்த வர்கள். இந்த 2,016 பேர்களுக்கும் அதாவது 1,008 ஜோடி மண மக்களுக்கும் எனது நெஞ்சார்ந்த வாழ்த்துக் களையும், பாராட்டுக்களையும் மகிழ்ச்சியுடன் தெரி வித்துக் கொள்கிறேன்.

இறைவன் சாட்சியாகவும், சமுதாயத்தின் ஆதர வோடும் மணவாழ்க்கையை ஏற்றுக் கொண்டுள்ள மணமக்கள் அனைவரும் சமுதாயத்திற்குத் தங்களால் ஆன உதவிகளை நல்கிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

சில பத்திரிகைகளில் இன்றைக்கு நடை பெற்றுள்ள 1,008 திருமணங்கள் கின்னஸ் சாதனைப் புத்தகத்தில் இடம் பெற வேண்டும் என்று எழுதி இருக்கிறார்கள். இது புதிய சாதனை அல்ல. எங்களைப் பொறுத்தவரை இந்தச் சாதனை ஏற்கனவே நிகழ்த்தி முடித்து விட்டோம்.

1991 முதல் 1996-ம் ஆண்டு வரை முதல் முறை யாக நான் ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோது அப் போது கழகத்தின் சார்பில், முதலில் சிதம்பரத்தில் 2,500 திருமணங்கள் ஒர சேர நடத்தினோம். அதனை அடுத்து 1996-ம் ஆண்டில் திருச்சி மாநகரத்தில் 5,004 திருமணங் கள் ஒரு சேர ஒரே பந்தலில் நடத்தினோம். ஆகவே எங்களைப் பொறுத்தவரை, கழகத்தைப் பொறுத்த வரையில் இது புதிய சாதனை அல்ல.

ஆனால் இந்து சமய அறநிலையத்துறையின் கீழ் அரசு சார்பில் நடத்தப்படும் இத்தகைய ஒரு மாபெரும் நிகழ்ச்சி இதுதான் முதலான நிகழ்ச்சியாகும். முதல் முறையாக அரசு சார்பில் இத்தகைய பிரம்மாண்டமான நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ஆனால் கின்னஸ் சாதனை புத்தகத்தில் இடம் பெற வேண்டும் என்பது எங்களுடைய நோக்கம் அல்ல. அதற்காக நாங்கள் எதையும் செய்யவில்லை. ஏழ்மை காரணமாக திருமணம் கூட செய்து முடிக்க முடியாத குடும்பங்களில் அந்த வாட்டத்தைப் போக்க வேண்டும், ஏழை எளிய பெண்களின் வாழ்க்கையில் ஒளி விளக்கை ஏற்ற வேண்டும். தமிழகத்தில் எல்லோரும் எல்லாமும் பெற்று வளமுடன் வாழ வேண்டும் என்பதே எங் களுடைய நோக்கம். அதற்காக இந்த அரசு தொடர்ந்து முனைப்புடன் செயல்படும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு இன்று இல்லறம் ஏற்றுக் கொண்டுள்ள மணமக்கள் அனைவரும் சீரோடும், சிறப்போடும் வாழ்வாங்கு வாழ வேண்டும் என்று வாழ்த்துகிறேன்.

★★★

# மங்கையர்க்குத் தனி அரசி எங்கள் தெய்வம்

- முனைவர் த. அமிர்தலிங்கம்

செயற்கரியவான செயல்கள் செய்து மக்கள் சேவைக்குத் தம்மை அர்ப்பணித்துக் கொள்வோரை - அவர்கள் ஆடவர் ஆயினும், பெண்டிர் ஆயினும் வேற்றுமை பாராது ''தெய்வம்'' எனப் போற்றுதல் நம் தமிழ்மக்களின் பண்பு என்பதைப் பெரியபுராணம் நமக்கு நன்கு உணத்துகின்றது.

அறுபத்து மூன்று நாயன்மார்களில் மூவர் - காரைக்கால் அம்மையார், மங்கையர்க்கரசியார், இசை ஞானியார் - பெண் நாயன்மார்கள் ஆவர். இம்மூவரில் மங்கையர்க்கரசியாரின் சைவத்திருத்தொண்டினை மனமாரப் போற்றி அவரைத் ''தெய்வம்'' எனப் போற்று கின்றார் நம் தெய்வச் சேக்கிழார் பெருமான்.

''மங்கையர்க்குத் தனிஅரசி எங்கள் தெய்வம்
வளவர்திருக் குலக்கொழுந்து வளைக்கை மானி
செங்கமலத் திருமடந்தை கன்னி நாடான்
தென்னர்குலப் பழிதீர்த்த தெய்வப் பாவை
எங்கள்பிரான் சண்பையர்கோன் அருளி னாலே
இருந்தமிழ்நா டுற்றஇடர் நீக்கித் தங்கள்
பொங்கொளிவெண் திருநீறு பரப்பி னாரைப்
போற்றுவார் கழல்எம்மால் போற்ற லாமே''.

(மங்கையர்க்கு அரசியார் , 1)

இவ்வாறு சேக்கிழார் பெருமான் மங்கையர்க் கரசியாரைப் போற்றுதற்குக் காரணம், பரசமய கோளரி யும் பாலறாவாயரும் ஆன திருஞானசம்பந்தர் அவ் வம்மையாரைத் தம் திருவாக்கில் வைத்துப் போற்றி யுள்ள சிறப்பினைத் தாம் உணர்ந்து உணர்ந்து, நெகிழ்ந்து நெகிழ்ந்து, ஊற்றெழும் கண்ணீர் அதனால் உடல் நனைந்து நனைந்து, மங்கையர்க்கரசியாரின் தெய்வ மாண்பினை நாளும் கொண்டாடிப் போற்றத் தலைப் பட்டமையே காரணம் ஆகும்.

கொன்றைமாலை அணிந்து மகிழும் சிவ பெருமான் திருப்புகழையன்றி வேறு புகழ் பேசியறியா திருஞானசம்பந்தர்தம் திருவாக்கால் பாடல் பெறத் தவம் செய்த மங்கையர்க்கரசியாரை எப்படி நான் போற்றுவேன்? என்ன கூறிப் போற்றுவேன்? என்று சேக்கிழாரே வியப்புடன் கூறி மகிழ்வதைக் கீழ்வரும் பாடலால் நாம் நன்கு உணரலாம்.

''பூசுரர் சூளாமணியாம் புகலி வேந்தர்
போனக ஞானம் பொழிந்த புனித வாக்கால்
தேசுஉடைய பாடல்பெறும் தவத்தி னாரைச்
செப்புவது யாம்என் அறிந்து? தென்னர்கோமான்
மாசுஇல் புகழ் நெடுமாறன் தனக்குச் சைவ
வழித்துணையாய் நெடுங்காலம்
மன்னிப்பின்னை
ஆசில் நெறி அவரோடும் கூட ஈசர்
அடிநிழல் கீழ்அமர்ந்திருக்க அருளும் பெற்றார்''

(மங்கையர்க்கு அரசியார் : 2)

''திருத்தொண்டத் தொகை''யில் சுந்தரமூர்த்தி நாயனார் திருஞானசம்பந்தர்தம் பெருமையைப் போற்றும்போது


''வம்பறா வரிவண்டு மணம்நாற மலரும்
மதுமலர்நற் கொன்றையான் அடியலாற் பேணா
எம்பிரான் சம்பந்தன்''

என்று ஏற்றமிகப் போற்றுகின்றார்.

அத்தகைய சிவபெருமான் பெருமையை மட்டுமே போற்றவல்லவராகிய நம் சம்பந்த சுவாமிகள் ''திருவாலவாய்'' திருத்தலத்தைப் போற்றும் ஒரு பதிகம் முழுவதும் முதற்பாடலில் மங்கையர்க்கரசியாரையும், இரண்டாம் பாடலில் குலச்சிறைநாயனாரையும், மூன்றாவது பாடலில் மங்கையர்க்கரசியாரையும், நான்காம் பாடலில் குலச்சிறை நாயனாரையும் என முறைப்படுத்திக் கொண்டு பதிகம் முழுவதையும் இவ்விருவரையும் மாறிமாறிப் புகழ்வதோடு, ''திருக் கடைக் காப்பு'' எனும் பதினோராம் பாடலில் இவ் விருவரையும் ஒரு சேர வைத்து

''பன்னலம் புணரும் பாண்டிமா தேவி
குலச்சிறை எனுமிவர் பணியும்''

எனப் பாடிப் போற்றுகின்றார் என்றால். மங்கையர்க் கரசியாரும், குலச்சிறையாரும் சமணவிருள் மாய்ந்து சைவ ஒளி தழைக்க ஆற்றிய அரும்பணியை ஞால மெல்லாம் நன்குணரவேண்டும் என்பது பற்றியே அவ்வாறு பாடியுள்ளார் என்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டும்.



அவ்வாறு நம் திருஞானசம்பந்த சுவாமிகள் ''திருவாலவாய்''த் திருப்பதிகத்தில் ஐந்து பாடல்களில் முழுமையாக மங்கையர்க்கரசியாரைப் போற்றிப் பாடியுள்ளமையை மனதிற் கொண்டே நம் சேக்கிழார் பெருமான் திருஞானசம்பந்தர் தம் திருவாக்கினைப் பொன்னெனப் போற்றி ''மங்கையர்க்குத் தனிஅரசி எங்கள் தெய்வம்'' என்று போற்றிப் புகழ்கின்றார்.

இனி, மங்கையர்க்கரசியரைத் திருஞானசம்பந்த சுவாமிகள் பாடியுள்ள ஐந்து திருப்பாடல்களையும் இங்குநாம் ஒரு சேரக் கண்டும், பாடியும், போற்றியும் மகிழலாம்.

''மங்கையர்க் கரசி வளவர்கோன் பாவை
வரிவளைக் கைம்மட மானி
பங்கயச் செல்வி பாண்டிமா தேவி
பணிசெய்து நாடொறும் பரவப்
பொங்கழல் உருவன் பூதநா யகனால்
வேதமும் பொருள்களும் அருளி
அங்கயற் கண்ணி தன்னொடும் அமர்ந்த
ஆலவாய் ஆவதும் இதுவே''

(பதிகம் 378-1)

செந்துவர் வாயாள் சேலன கண்ணாள்
சிவன்திரு நீற்றினை வளர்க்கும்
பந்தணை விரலாள் பாண்டிமா தேவி
பணிசெயப் பாரிட நிலவும்
சந்தமார் தரளம் பாம்புநீர் மத்தம்
தண்ணெருக் கம்மலர் வன்னி
அந்திவான் மதிசேர் சடைமுடி அண்ணல்
ஆலவாய் ஆவதும் இதுவே''

(பதிகம் 378-3)

''செய்யதா மரைமேல் அன்னமே அனைய
சேயிழை திருநுதற் செல்வி
பையரவல்குல் பாண்டிமா தேவி
நாடொறும் பணிந்தினி தேத்த
வெய்யவேற் சூலம் பாசமங் குசம்மான்
விரிகதிர் மழுவுடன் தரித்த
ஐயனார் உமையோ டின்புறு கின்ற
ஆலவாய் ஆவதும் இதுவே.''

(பதிகம் 378-5)

''முத்தின்தாழ் வடமும் சந்தனக் குழம்பு
நீறுந்தன் மார்பினின் முயங்கப்
பத்திஆர் கின்ற பாண்டிமா தேவி
பாங்கொடு பணிசெய நின்ற
சுத்தமார் பளிங்கின் பெருமலை உடனே
சுடர்மர கதம்அடுத் தாற்போல்
அத்தனார் உமையோ டின்புறு கின்ற
ஆலவாய் ஆவதும் இதுவே.

(பதிகம் 378-7)

''மண்ணெலாம் நிகழ மன்னனாய் மன்னும்
மணிமுடிச் சோழன்தன் மகளாம்
பண்ணினேர் மொழியாள் பாண்டிமா தேவி
பாங்கினாற் பணிசெய்து பரவ
விண்ணுளார் இருவர் கீழொடு மேலும்
அளப்பரி தாம்வகை நின்ற
அண்ணலார் உமையோ டின்புறு கின்ற
ஆலவாய் ஆவதும் இதுவே.''

(பதிகம் 378-9)

''தற்காத்துத் தற்கொண்டான் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்''

எனப் பெண்ணிற்கு இலக்கணம் வகுக்கின்றார் திருவள்ளுவப் பெருந்தகை.

சோழமன்னனின் திருமகளாகப் பிறந்து மதுரை கூன் பாண்டியனுக்கு அருந்தவ மனைவியாரான நம் மங்கையர்க்கரசியார் மங்கையர் குல விளக்காகத் திகழ்ந்து தம்மையும், தம் கணவனாரையும் காத்துக் கொண்டதோடு தமிழகத்தின் பழம்பெரும் சமயமான நம் சைவசமயத்தையும் கட்டிக் காப்பாற்றிய பெருமையால் ''மங்கையர்க்குத் தனியரசி''யாகவும், ''எங்கள் தெய்வ''மாகவும் சிறப்புற்றார் என்று போற்றிப் புகழ்கின்றார் தெய்வச் சேக்கிழார் பெருமான்.

மங்கையர்க்கரசியார் மதுரை மன்னனான கூன் பாண்டியனை மணந்து, மதுரைக்குச் சென்றபோது மதுரை முழுவதும் சமண இருள் பரவி இருந்தது. கூன் பாண்டிய மன்னனும் தன்னிலை தடுமாறி சமண வலையிற் சிக்கியிருந்தான்.

''தடுமாறும் நெறி அதனைத்
தவம் என்று தம்உடலை
அடுமாறு செய்து ஒழுகும்
அமண் வலையில் அகப்பட்டு''

(நின்றசீர்நெடுமாற நாயனார், 1)

கூன்பாண்டியனும் தன் உடலைப் போலவே உள்ளமும் இருள்மண்டிக் கிடந்தான் என்று பாடுகின்றார் சேக்கிழார் பெருமான்.

''மன்னன் எவ்வழி, மக்கள் அவ்வழி'' என்பது முதுமொழி அன்றோ! கூன்பாண்டியனின் ஆட்சியில் அவன் குடிமக்களும் சமண சமயம் சார்ந்தபடியால், பழமையும் பெருமையும் மிக்க திருஆலவாய்ச் சிவ பெருமான் திருக்கோயிலுக்குச் செல்லும் பக்தர்களும் அருகிவிட்டதால், வழிபாடு குறைவதாயிற்று. பாண்டி நாடு முழுவதும் சமணர் நாடாயிற்று. மங்கையர்க் கரசியார், அமைச்சர் குலச்சிறையார் - இவ்விருவர் அல்லாத பாண்டி நாட்டார் எல்லாம் சமணசமயம் சார்ந்து ஒழுகிய படியால், எங்கும் அமண் இருள் அண்டிப் படர்ந்திருந்தது என்று அன்றைய நிலையை உள்ளது உள்ளவாறு படம் பிடித்துக் காட்டுகின்றார் சேக்கிழார் பெருமான்.

''பூழியர் தமிழ்நாட்டு உள்ள
பொருவில் சீர்ப்பதிகள் எல்லாம்
பாழியும் அருகர் மேவும்
பள்ளிகள் பலவும் ஆகிச்
சூழிருள் குழுக்கள் போலத்
தொடைமயில் பீலியோடு
மூழிநீர் கையில் பற்றி
அமணரே ஆகி மொய்ப்ப''

(திருஞானசம்பந்தர் புராணம் - 601)

''வரிசிலைத் தென்னவன்தான்
உய்தற்கு வளவர் கோமான்
திருஉயிர்த் தருளும் செல்வப்
பாண்டி மாதேவி யாரும்
குறைகழல் அமைச்சனாராம்
குலச்சிறை யாரும் என்னும்
இருவர்தம் பாங்கும் அன்றிச்
சைவம் அங்கு எய்தாது ஆக''

(திருஞானசம்பந்தர் புராணம் - 603)

இவ்வாறு அரும்பெறல் தமிழ்நாடு உற்ற திங்கினுக்கு அளவு இல்லாத அந்நிலையில் திருஆலவாய்த் திருக்கோயிலை தினமும் திறக்கச் செய்து இறைவனுக்குக் குறைவிலாது வழிபாடுகள் ஆற்றிவந்த மங்கையர்க்கரசியாரின் பெருமையையே நம் திருஞானசம்பந்தர் ஒருபதிகம் முழுவதும்

''பங்கயச் செல்வி பாண்டிமா தேவி
பணிசெய்து நாடொறும் பரவ''
''பந்தணை விரலாள் பாண்டிமா தேவி
பணிசெய''
''பையர வல்குல் பாண்டிமா தேவி
நாடொறும் பணிந்துஇனிது ஏத்த''
''பத்திஆர்கின்ற பாண்டிமா தேவி
பாங்கொடு பணிசெய நின்ற''
''பண்ணினேர் மொழியாள் பாண்டி மாதேவி
பாங்கினாற் பணிசெய்து பரவ''

என்று ''என்கடன் பணிசெய்து கிடப்பதே'' எனப் பணி செய்து பரவிய அரசியாரின் கடமையுணர்வைப் போற்றியிருக்கக் காணுகின்றோம்.

''பாண்டிநாட்டில் பழமைபோல் சைவம் தழைத்தோங்க வேண்டும்; தம் கணவனாரும், குடி மக்களும் சிவபெருமானை வழிபட்டுப் பிறவிப் பயன் பெறவும் வேண்டும்'' என்று ஆலவாய் அப்பனை அனுதினமும் வேண்டி வழிபட்டு வந்தார் நம் மங்கையர்க்கு அரசியார்.

இந்நிலையில்தான் வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத்துறை விளங்கத் திரு அவதாரம் புரிந்த திருஞானசம்பந்தப் பெருமான் திருமறைக்காட்டில் எழுந்தருளியிருந்த செய்தியை அவர் கேள்வியுற்று அளவிலா மகிழ்ச்சியடைந்தார். தம் அமைச்சர் குலச்

சிறையார் வாயிலாக திருஞானசம்பந்தருக்கு ஆட்கள் அனுப்புகிறார்.

''நன்று நமை ஆளுடைய நாதன் பாதம்
நண்ணாத எண்ணில் அமண் குண்டர் தம்மை
வென்றுஅருளி வேதநூல் நெறியே ஆக்கி
வெண்ணீறு வேந்தனையும் இடுவித்து ஆங்கு
நின்றசெயல் சிவனடியார் செயலேஆக
நினைந்து அருள வேண்டும்''

''இதுவே அரசியாரின் விண்ணப்பம்'' என்று அவர் விடுத்த ஆட்கள் திருஞானசம்பந்தரிடம் வந்து விண்ணப் பித்த பிறகுதான், வேதம் வளர்க்கவும், சைவம் விளக் கவும், வேதவனத்து அருமணியை மீண்டும் மக்கள் வணங்கி வழிபாடு செய்யும் வகையில் சைவம் காக்கவும் மதுரைக்குப் புறப்பட்டு வந்து சேருகின்றார் நம் திருஞானசம்பந்தர்.

இவ்வாறு எழுந்தருளிய திருஞானசம்பந்தரை வணங்கி வரவேற்கும் பேறு பெற்ற பொழுதே பாண்டி நாட்டின் அமணிருள் நீங்கிவிடும் என்ற நம்பிக்கையும் உண்டாகி விடுகின்றது மங்கையர்க்கரசியாருக்கு.

''சென்ற காலத்தின் பழுதிலாத் திறமும்
இனிஎதிர் காலத்தின் சிறப்பும்
இன்றெழுந் தருளப்பெற்ற பேறுஇதனால்
எற்றைக்கும் திருவருள் உடையேம்
நன்றியில் நெறியில் அழுந்திய நாடும்
நற்றமிழ் வேந்தனும் உய்ந்து
வென்றிகொள் திருநீற்று ஒளியினில் விளங்கும்
மேன்மையும் படைத்தனம் என்பார்''

என்று திருஞானசம்பந்தரைப் போற்றி வர வேற்றனர் மங்கையர்க்கரசியாரும், குலச்சிறையாரும்.

''தென்னவன் பெருந்தேவியார் சிவக்கன்றின் செய்ய
பொன்அடிக் கமலங்களில் பொருந்தமுன் விழுந்தார்
மன்னு சண்பையர் வள்ளலார் மகிழ்சிறந்து அளிக்கும்
இன்னருள் பெரும்சிறப்பொடும் திருக்கையால்
எடுத்தார்''

என்று மங்கையர்க்கரசியார் திருஞானசம்பந்தரைப் பணிந்து வணங்கிய அருட்காட்சியை அழகுறப் பாடிப் பரவுகின்றார் சேக்கிழார் பெருமான்.

''யானும் என் பதியும் செய்த தவம் என்கொல்'' என்று அரசியார் பணிவுடன் கூற ''பரசமயத்திடை தொண்டு வாழும் நீர்மையீர் உமைக் காண வந்தனம்'' என்று பதில் கூறுகின்றார் பாலறாவாயர்.

''தென்னாடு உடைய சிவனே போற்றி'' என்று மெய்யடியார்கள் கொண்டாடும் தென்னவர் நாட்டில், திருநீறு பூசிய சிவனடியார்கள் திருஞான சம்பந்தரோடு வந்துற்றனர் என்பதைக் கேட்ட அமண்குண்டர்கள் ''கண்டுமுட்டு'' எனவும் ''கேட்டுமுட்டு'' எனவும் கலங்கிய கலக்கத்தைச் சேக்கிழார் பெருமான்

''வெண்பொடி பூசும் தொண்டர்
விரவினார் அவரை எல்லாம்
கண்டு முட்டு அடிகள் மார்கள்;
கேட்டு முட்டு யானும், காதல்
வண்டு உணத் துதைந்த கோதை
மானியே இங்கு வந்த
பண்பு மற்று இதுவே ஆகும்
பரிசுவேறு இல்லை என்றான்''

(திருஞானசம்பந்தர் - 629)

எனக் காட்டுகின்றார்.

சைவம் காக்க வேண்டிய மன்னவன், சமயப் பொறை போற்ற வேண்டிய தென்னவன்தானே ''கேட்டு முட்டு'' என்று சைவத்தைப் புறக்கணிக்கத் துணிவானே யானால், அமண்குண்டர்கள் திருஞானசம்பந்தர் தங்கியிருக்கும் திருமடத்திற்குத் தீ இட முயன்றதில் என்ன வியப்பிருக்க முடியும்?

திருஞானசம்பந்தர் திருமடத்திற்குத் தீயினை இட்டு அவரைக் கொல்ல முயல்கின்றனர் அமண் குண்டர்கள். குடிகள் செய்த குற்றம், கொற்றவனைச் சேர்தல் இயற்கை. ஆகவே பொய்யராம் அமணர்கள் இட்ட தீ, அவர்களின் அரசனைச் சாரட்டும் என்று பணிக்கிறார் பாலறாவாயர்.

''செய்யனேதிரு ஆலவாய் மேவிய
ஐயனே அஞ்சலி என்றருள் செய்எனைப்
பொய்ய ராம் அமணர் கொளுவும் சுடர்
பையவே சென்று பாண்டியற் காகவே''

என்று திருஞானசம்பந்தர் பாடிப்பணித்த அளவில் சமணர்கள் இட்ட தீ, அவர்களின் மன்னனைச் சென்று வெப்பு நோயாகச் சேர்ந்து விடுகின்றது.

''பையவே செல்க'' என்று ஏன் தீயினுக்குத் திருஞானசம்பந்தர் கட்டளையிட்டார் என்று காரணம் கூறவரும் சேக்கிழார் பெருமான், மங்கையர்க்கரசி யார்தம் மேல் திருஞானசம்பந்தர் கொண்ட பரிவே அவ்வாறு கட்டளையிடவும் காரணம் ஆயிற்று என்று தெளிவுபடுத்துகின்றார்.

''பாண்டிமா தேவியார் தமது பொற்பில்
பயிலும்நெடு மங்கலநாண் பாதுகாத்தும்

ஆண்டகையார் குலச்சிறையார் அன்பினாலும்
அரசன்பால் அபராதம் உறுதலாலும்
மீண்டுசிவ நெறி அடையும் விதியினாலும்
வெண்ணீறு வெப்புஅகலப் புகலிவேந்தர்
தீண்டிஇடப் பேறு உடையன் ஆதலாலும்
தீப்பிணியைப் பையவே செல்க என்றார்

(திருஞானசம்பந்தர் - 705)

மங்கையர்க்கரசியாரின் பொற்றாலியைக் காப்பாற்றவும், அவர்தம் பிரார்த்தனைக்கு இணங்க கூன் பாண்டியனைத் திருநீறு இட்டு, நின்ற சீர் நெடுமாறன் ஆக்கி சைவசமயம் தழைக்கச் செய்ய வேண்டியும் - அத்தகைய விதி இருப்பதனாலேயே ''பையவே செல்க'' என்று தீயினுக்குத் திருஞானசம்பந்தர் கட்டளை யிட்டார் என்று சேக்கிழார் பெருமான் தெளிவு படுத்து கின்றார்.

திருஞானசம்பந்தர் மதுரைக்கு வந்துற்றபோதே வஞ்சக அமணர்களால் அவருக்கு வரும் தீங்கு ஏதேனும் இருக்குமோ? என்று வாட்டமுறுகிறார் நம் மங்கை யர்க்கு அரசியார். திருஞானசம்பந்தருக்கு ஏதும் தீது உண்டாகும் ஆனால் அவரை வரவழைத்த தாம் உயிர் துறந்து விடவேண்டும் எனவும் மங்கையர்க்கரசியார் உறுதிபூண்டிருந்தார் என்பதைச் சேக்கிழார்

''மானியார் தாமும் அஞ்சி
வஞ்சகப் புலையர் தாங்கள்
ஈனமே புரிய வல்லார்
செய்வது என்நாம்? என்று எண்ணி
ஞான சம்பந்தர் தம்பால்
நன்மை அல்லாது செய்யும்
ஊனம் வந்து அடையில் நாமும்
உயிர்துறந்து ஒழிவது என்றார்''

(திருஞானசம்பந்தர் - 696)

என எடுத்துக் காட்டுகின்றார்.

இத்தகைய தாயுள்ளம் கொண்ட மங்கையர்க் கரசியார், சமணக்குண்டர்கள் தீவைத்தும் திருஞான சம்பந்தர் திருமடத்திற்குத் தீமை உண்டாகவில்லை என அறிந்து மனம் தெளிகிறார். தம் கணவனாருக்கு வெப்புநோய் உண்டாகியதை அறிந்து, இரவில் அமணர் செய்த தீங்கே இவ்வாறு முடிந்தது என்பதை யும் உணர்கிறார். ''நோயிற்குத்தீர்வு பிள்ளையார் திருவருளே'' என்று அவர் மன்னனுக்கு உணர்த்த, ''ஞானசம்பந்தன் என்னும் நாமமந்திரம் கேட்டு'' வெப்புநோயின் வாட்டம் சற்றே தணியும் மன்னனும் ''மன்னிய சைவ நீதி மாமறைச் சிறுவர் வந்தால் அன்னவர் அருளால் இந்நோய் அகலுமேல் அறிவேன்'' என்று ஆளுடைப் பிள்ளையாரை அழைத்து வர இசைவு தருகிறான்.

பாண்டிமாதேவியார் மன்னன் இசைவு தந்த வுடன் திருஞானசம்பந்தருடைய திருமடத்திற்கு அமைச்சர் குலச்சிறையாருடன் விரைந்து சென்று காணுகின்றார். திருஞான சம்பந்தரை இவர்கள் கண்ட காட்சியைச் சேக்கிழார்

''ஞானத்தின் திருவுருவை
நான்மறையின் தனித்துணையை
வானத்தின் மிசையன்றி
மண்ணில்வளர் மதிக்கொழுந்தைத்
தேன்நக்க மலர்க்கொன்றைச்
செஞ்சடையார் சீர்தொடுக்கும்
கானத்தின் எழுபிறப்பைக்
கண்களிப்பக் கண்டார்கள்''

(திருஞானசம்பந்தர், 728)

என்று களிபேருவகையுடன் வருணித்திருக்கக் காணு கின்றோம்.

திருஞானசம்பந்தரைக் கண்ட பொழுதே அமணர்கள் மடத்திற்குத் தீவைத்த கொடுஞ்செயலும் நினைவிற்கு வர மங்கையர்க்கரசியாரும், குலச் சிறை யாரும் எத்தகைய துயரம் கொண்டார்கள் என்பதையும் சேக்கிழார் கூறுகின்றார்.

''கண்டபொழுது அமண்கொடியோர் செய்த
கடுந்தொழில் நினைந்தே
மண்டியகண் அருவிநீர் பாய
மலர்க்கை குவித்துப்
புண்டரிகச் சேவடிக்கீழ்ப்
பொருந்தநிலம் உறவிழுந்தார்''

(திருஞானசம்பந்தர், 731)

இவ்வாறு வணங்கி வழிபட்ட மங்கையர்க் கரசியாரைத் திருக்கையால் எடுத்தருளும் திருஞான சம்பந்தர் ''திருவுடையீர்! உங்கள்பால் தீங்குஉளதோ?'' என்று பரிவுடன் வினவுகிறார். மங்கையர்க்கரசியாரும் ''வஞ்சகர் மற்று அவர் செய்த தீத்தொழில் போய் மன்னவன்பால் எஞ்சல் இலாக் கொடுவெதுப்பாய் எழாநின்றது'' எனக் கூறிச் சமணர் சூழ்ச்சிகளை வென்று சைவம் தழைக்க அருளிச் செய்வீர்கள்

ஆனால் ''உய்யும் எமது உயிரும் அவன் உயிரும்'' எனத் தொழுது உரைக்கின்றார்.

உடன் திருஞானசம்பந்தரும்

''ஒன்றும் நீர் அஞ்ச வேண்டா
உணர்வில் அமணர் தம்மை
இன்றுநீர் உவகை எய்த
யாவரும் காண வாதில்
வென்று மீனவனை வெண்ணீறு
அணிவிப்பன் விதியால்''

(திருஞானசம்பந்தர், 734)

என்று திருவாய் மலர்ந்து கூறியருளுகின்றார்.

''வேதவேள்வியை நிந்தனை செய்துழல்
ஆத மில்லி அமணொடு தேரரை
வாதில் வென்றழிக் கத்திரு வுள்ளமே
பாதி மாதுடன் ஆய பரமனே
ஞாலம் நின்புகழே மிகவேண்டும்தென்
ஆல வாயில் உறையும்எம் ஆதியே''

எனத் தொடங்கும் திருப்பதிகம் பாடி, திருஆலவாய் இறைவரின் திருவருளைப் பெற்று, அரண்மனைக்கு எழுந்தருளி வெப்பு நோயால் வாடும் கூன்பாண்டியனைக் காணுகின்றார் திருஞானசம்பந்தர்.

அங்கும் சமணக்குண்டர்கள் வந்து சூழ்ந்து கொள்ளும் பொழுது மங்கையர்க்கரசியார் ''இவரோ! இளம்பிள்ளை, சமணர்கள் எண்ணிலாதவர்கள் நின்று எதிர்க்கிறார்களே!'' என்று நடுக்கம் கொள்கின்றார்.

மங்கையர்க்கரசியாரின் மனக்கலக்கம் தீரும் வகையில் ஞானப்பால் உண்ட ஆளுடைய பிள்ளையார்

''மானின்நேர் விழி மாதராய்
வழுதிக்கு மாபெருந் தேவிகேள்!
பானல்வாயொடு பாலன் ஈங்கிவன்
என்றுநீ பரிவெய்திடேல்
ஆனைமாமலை ஆதியாய இடங்களில்
பல அல்லல்சேர்
ஈனர்கட்கு எளியேன் அலேன் திரு ஆலவாய்
அரன்நிற்கவே''

இவ்வாறு பதிகம் பாடி மங்கையர்க்கரசியார் மனக்கலக்கம் தீர்த்ததுமன்றி, ''மந்திரமாவது நீறு'' எனத் தொடங்கும் திருப்பதிகம் பாடி கூன் பாண்டியனின் வெப்பு நோயும் தீர்த்தருளுகிறார். பின் நடைபெறும் அனல் வாது, புனல் வாதுகளிலும் திருஞானசம்பந்தரே வெற்றி பெறுகிறார்.

''வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரன்நாமமே
சூழ்க வையகமும் துயர்தீர்கவே''

எனத் தொடங்கும் பதிகம் திருஞானசம்பந்தர் பாடி வைகை ஆற்றில் இட்டருள, மாதவர் மனம் பிறவி யாற்றில் எதிர் ஏறுவதுபோல், திருஞானசம்பந்தர் இட்ட ஏடு, வைகை ஆற்றின் நீரைக் கிழித்துக் கொண்டு வெள்ளப் பிரவாகத்துக்கு எதிராக முன்னேறிச் சென்று, கரை ஏறுகின்றது.

''வேந்தன் ஓங்குக'' என்று இத்திருப்பதிகத்தில் திருஞானசம்பந்தர்பாடியருளியபடியால் கூன்பாண்டிய னின் கூனும் நிமிர்ந்து அவன் நின்ற சீர் நெடுமாறனாகப் பெருமை பெறுகின்றான்.

''தென்னவன் தனக்கு நீறு
சிரபுரச் செல்வர் ஈந்தார்
முன்அவன் பணிந்து கொண்டு
முழுவதும் அணிந்து நின்றான்
மன்னவன் நீறு அணிந்தான் என்று
மற்றுஅவன் மதுரை வாழ்வார்
துன்னிநின் றார்கள் எல்லாம்
தூயநீறு அணிந்து கொண்டார்''

(திருஞானசம்பந்தர், 857)

''பூதி மெய்க்கணிந்து வேந்தன்
புனிதனாய் உய்ந்த போது
நீதியும் வேத நீதி
ஆகியே நிகழ்ந்தது எங்கும்
மேதினி புனிதம் ஆக
வெண்ணீற்றின் விரிந்த சோதி
மாதிரம் தூய்மை செய்ய
அமண்இருள் மாய்ந்தது அன்றே''

(திருஞானசம்பந்தர், 858)

என்பது சேக்கிழாரின் மணிவாசகங்கள்.

இவ்வாறு அமணிருள் நீங்கி, நம்தமிழ் நாட்டில் வெண்ணீற்றின் விரிந்த சோதியும், நீதியும் தழைக்க ஆற்றிய அரும்பெரும் சாதனை காரணமாகவே

''மங்கையர்க்குத் தனி அரசி
எங்கள் தெய்வம்''

என்று மனமார வாழ்த்திப் போற்றுகின்றார் தெய்வச் சேக்கிழார் பெருமான்! அத்தகைய தென்னர்குல பழித் தீர்த்த தெய்வப் பாவையை நாமும் மனமார வணங்கி வாழ்த்திடுவோமாக!

★★★

# இராமராஜ்யம்

- கலைமாமணி மா. லட்சுமணன்

(கலைமாமணி மா. லட்சுமணன் ஐம்பது ஆண்டுக் காலமாகத் திரைத் துறையில் கதையாசிரியராகப் பணியாற்றிவருகிறார். அவரடைய நீதிக்கதைகளில் ஒன்று இது)

கொலுமண்டபம் அன்றைக்கு நிறைவாகக் காட்சியளித்தது - காரணம் மன்னனது பிறந்த நாள்! எனவே வெளிநாட்டிலிருந்தும் பல பேர் - வாழ்த்துவதற்காகவே வருகை தந்திருந்தனர்.

வாழ்த்துவோருக்கு பொன்னையும் பொருளையும் அள்ளி வழங்கிக் கொண்டிருந்தான் மன்னன். அவையிலே, புலவன் ஒருவன் - அரசனைப் புகழ்ந்து கொண்டிருந்தான்.

மன்னா! நான் இராமனைக் காண்டதில்லை! உன்னைக் காண்கிறேன்! நீதான் இராமன் - இராம ராஜ்யத்தைக் கண்டதில்லை! உனது ஆட்சியில் விளங்கும் - இந்த இராஜ்யமே இராமராஜ்யம்! எனக் கூறிக்கொண்டிருந்தான்.

மன்னனும் மகிழ்ச்சியில் திளைத்துக் கொண்டிருந்தான்!

அப்போது, எங்கிருந்தோ, ஒரு காகம் பறந்து வந்து அமர்ந்தது - பேசவும் ஆரம்பித்தது!

மன்னா! இந்த மனிதன் தனது வறுமையைக் களைந்து கொள்ள வேண்டுமென்ற நோக்கத்தில் பொய்யை வாரி விடுகிறான். புகழ்ச்சிக்கும் ஒரு அளவு உண்டு.

நீ நீடுவாழவேண்டும் - உன் நாடு நலம் பெற வேண்டும் - உனது நாட்டு மக்கள் - எல்லா நலமும் பெறவேண்டும் என வாழ்த்தட்டும். அதை விட்டுவிட்டு - உன்னை இராமனென்றோ உனது நாட்டை இராம இராஜ்யமென்றோ வர்ணிப்பது சரியன்று! புலவன் வாய் தவறி அப்படிக் கூறினாலும் - மன்னனான நீ ஒரு வார்த்தை கூட மறுப்புக் கூறாமல் புன்னகையுடன் ஏற்றுக் கொள்வது நியாயத்துக்குப் புறம்பானது!

இராமன் எப்படிப்பட்டவன்? அவன் ஆண்ட இராம ராஜ்யம் எப்படிப்பட்டது? என்பது இந்த புலவனுக்கும் தெரியவில்லை! இந்தப்புவியை ஆளும் உனக்கும் தெரியவில்லை! தெரிந்தாலும் இது பற்றிய உண்மையை எடுத்துக் கூறும் துணிவு இந்த அவையிலே எவருக்குமில்லை! நீ என்னைக் கொன்றாலும் சரி! இது இராம இராஜ்யமில்லை. நீயும் இராமனில்லை. இது பற்றி நீ அறிய வேண்டுமெனில் - நான்கு குதிரை வீரர்களை என்னோடு அனுப்பு -

அயோத்திக்கு அவர்களை அழைத்துச் செல்கிறேன். அயோத்தியின் பெருமைதனை அவர்களின் வாயிலாக நீ கேட்டு அறியலாம்! என்றது.

காகம் கூறியபடியே - நான்கு வீரர்களை அயோத்திக்கு அனுப்பிவைத்தான். மன்னன்.

பயணம் பல நாள் தொடர்ந்தது! காகமும் வீரர்களும் அயோத்தியை வந்தடைந்தனர். காலம் பல சென்றாலும் அயோத்தியின் தோற்றத்தில் மாற்றம் குறையவில்லை!.... இராமனின் புகழுக்கு மாசு ஏற்படாவண்ணம் தூய மரபைக் கடைப்பிடித்து வந்தனர் அந்த நகரத்து மக்கள். வீரர்களைப் பார்த்துக் காகம் கூறியது!... அதோ தெரிகிறதே ஒரு ஆலமரம். அதன் அருகே செல்லுங்கள். அங்கே கிடக்கும் சிறிய பாறாங் கல்லை அப்புறப்படுத்துங்கள் என்றது!

காகம் கூறியபடியே வீரர்களும் கல்லை அப்புறப்படுத்தினர். இரண்டடி ஆழத்திற்கு மண்ணைத் தோண்டினர்.

கோயில் மணியின் மேல் பாகத்தால் மூடப் பட்டிருந்தது ஒரு வெள்ளித்தட்டு. மூடியை அகற்றினர் அந்தத் தட்டிலே முப்பத்திரண்டு கொற்கை முத்துக்கள் இருந்தன. அளவிலே ஒவ்வொன்றும் எலுமிச்சை பழத் தளவு இருந்தன. ''இவற்றை கொண்டு போய் உங்கள் மன்னனிடம் கொடுங்கள்'' என்று கூறிவிட்டுக் காகம் பறந்து சென்றுவிட்டது.

விலை மதிப்பற்ற அந்த முத்துக்களைக் கண்ட வீரர்கள் மனதிலே ஒரு விபரீத ஆசை தோன்றியது.

காகம் திரும்பி வரவா போகிறது? எத்தனை முத்துக்கள் இருந்தது என்பதும் மன்னனுக்குத் தெரியவா போகிறது?... எனவே இதில் உள்ள முத்துக்களில் ஆளுக் கொன்றை எடுத்துக் கொள்ளலாம் என்று கூறி நான்கு முத்துக்களை எடுத்துக் கொண்டனர். தங்களது சொந்த நாட்டுக்குத் திரும்பினர்.

அமைச்சரை சந்தித்து காகம் அளித்த முத்துக்கள் இருபத்தெட்டு எனக் கொடுத்தனர். அவர்கள் சென்ற பின் அந்த முத்துக்களில் நான்கை எடுத்து ஒளித்து வைத்துக் கொண்ட அமைச்சர் மற்றவைகளை எடுத்துக் கொண்டு அந்தப்புரத்துக்குச் சென்றார்.

வழியிலே மன்னரின் தம்பி எதிர்பட்டார் - 'எங்கே செல்கிறீர்' எனக் கேட்டார் மன்னரின் தம்பி.

அரசியாரிடம் இருபத்து நான்கு முத்துக்களை அளிக்கப்போவதாக அமைச்சர் கூறினார்.

என்னிடம் கொடுங்கள் நான் அவரிடம் அளித்து விடுகிறேன் எனக் கூறி - முத்துக்களை வாங்கிக் கொண்டார் மன்னரின் தம்பி. அமைச்சரும் முத்துக் களை அவரிடம் கொடுத்துச் சென்றார்.

அதிலே நான்கு முத்துக்களை எடுத்துவைத்துக் கொண்டு மீதமுள்ள இருபது முத்துக்களை அரசியா ரிடம் கொடுத்தார் அமைச்சரின் தம்பி.

அன்று இரவு சயன மண்டபத்தில் அரசரைச் சந்தித்த அரசியார் - இருபது முத்துக்களில் மாலை தொடுப்பது என்பது சிறிய அளவிலே இருக்கும்.... இதுபோன்ற முத்துக்கள் பத்தோ பதினைந்தோ இன்னும் கிடைத்தால் சரியாக இருக்கும் என்று கூறினார் - முயற்சி செய்வோம் ... எனக் கூறினார் மன்னர். மறுநாள் காலையில் நந்தவனத்திலே உலவிக் கொண்டிருந்தார் மன்னர் -

அப்போது அங்கே அந்த காகம் வந்தது ... முப்பத்திரண்டு முத்துக்கள் வந்து சேர்ந்ததா? எனக் கேட்டது காகம்!

''முப்பத்திரண்டா? இருபது வந்தது என்று தானே அரசியார்'' கூறினார் என்றார் அரசர்.

இதில் ஏதோ தவறு நடந்திருக்கிறது - கூப்பிடுங் கள் அரச வீரர்களை, என்றது காகம்!

வீரர்கள் வரவழைக்கப்பட்டு விசாரணையும் நடந்தது.

நடந்ததை ஒப்புக்கொண்டனர் - நான்கு முத்துக் கள் மீட்கப்பட்டன - அடுத்து அமைச்சரும் சிக்கினார். அவரும் நான்கு முத்துக்களை திருப்பிக் கொடுத்தார்....

அரசரின் தம்பி மட்டும் தப்பிக்க முடியுமா? அவரிடமிருந்தும் நான்கு முத்துக்கள் வந்து சேர்ந்தன. இப்போது மன்னனின் கைகளில் முப்பத்தி ரண்டு முத்துக்கள்.

காகம் சிரித்தது - இப்போது புரிந்ததா மன்னவா? உனது ராஜ்யம் இராமராஜ்யமா? எங்கு நோக்கினும் தீயவர்களே தென்படுகின்றனர்... வெளிப் படையாகக் கூறினால், நீயும் இராமனில்லை! ஏன் தெரியுமா? உன் உழைப்பில் வராததும் - பூர்வீகத்தில் வழி வழி வராததுமான செல்வத்தை நீ ஏன் ஏற்றுக் கொண்டாய்? இந்த முத்துக்களை பொக்கிஷத்தில் சேர்த்து பொதுமக்களுக்குப் பயன்படட்டும் என் றல்லவா நீ கூறியிருக்க வேண்டும். செய்தாயா? எவனோ வீதியிலே போகிறவன் சுய நலம் வேண்டி உன்னை இராமன் என்கிறான். நீயும் அதை ஏற்றுக் கொள்கிறாய்! எனக் காகம் கூறியது கேட்டு - வெட்கித் தலை குனிந் தான் அரசன்!

இருப்பினும் - இந்த முத்துக்கள் எப்படிக் கிடைத்தன? இதனுடைய முன்கதை என்ன என்பது பற்றி அறிய ஆவல் கொண்டான்.

காகமும் கூற ஆரம்பித்தது. அப்போது அயோத்தி மாநகரை இராமன் ஆண்டுவந்தான். தருமம் தழைத் தோங்கியது - எல்லா நலமும் பெற்று மக்கள் வாழ்ந்து வந்தனர்.

செல்வந்தர் மகளான ஒரு பெண் - தனது திருமணத்துக்கு வருகை தந்து வாழ்த்துமாறு - சீதா தேவியை அழைக்க அரண்மனைக்கு வந்தாள்.

திருமணத்துக்கு வருகிறேன். அதற்காக நீ அளிக் கும் இந்த முத்துக்கள் எனக்கு வேண்டாம். இல்லா தாருக்கு இவைகள் உதவட்டும் எனக் கூறி - மணப் பெண் கொண்டுவந்த முத்துக்களை ஏற்றுக்கொள் ளாமல் சென்றுவிட்டாள். வெள்ளித்தட்டிலே தான் கொண்டுவந்த இந்த முப்பத்திரண்டு முத்துக்களையும் - கோட்டை வாயிலில் வைத்துவிட்டு தன் வீடு திரும்பி னாள்- மணப்பெண்.

கேட்பாரற்று இந்த முத்துக்கள் வீதியிலே வெள்ளித் தட்டில் கிடந்தது.



தங்களுக்குச் சொந்தமில்லாத ஒரு பொருள் மீது கைவைக்க அஞ்சும் மக்கள் வாழ்ந்த காலமது!

ஊர்க்காவலுக்கு வந்த காவலன் ஒருவன் கண்ணிலே இந்த முத்துக்கள் பட்டன. வெள்ளித் தட்டோடு முத்துக்களை எடுத்து - கோட்டை மதிற் சுவரருகே உள்ள மரத்தடியில் வைத்து - நாவற்றிருந்த கோவில் மணியை எடுத்து - முத்துக்களின் மீது மூடி வைத்துவிட்டுப் போய்விட்டான்! கால ஓட்டத்தில் - மணியை - மண்மூடிவிட்டது.... இராமராஜ்யத்தின் பெருமையை நீ உணர வேண்டும் என்பதற்காக இந்த முத்துக்களை உன் கைக்குக் கிடைக்க வழிசெய்தேன்.

பிறர் பொருளுக்கு இச்சைப்படாத பெருநகரம் அயோத்தி. நீதி நெறி வழுவாது! செங்கோலோச்சியவன் இராமன்... இப்போது சொல் - நீ இராமனா? உனது ராஜ்யம் இராம ராஜ்யமா?

எனக் கேட்டது! காகம்!... தவறை உணர்ந் தான் மன்னன். திருந்த முடியாத அளவுக்கு நாடு கெட்டுப்போனதை நினைத்தான் மரவுரி தரித்துக் கானகம் சென்றான்! தவமியற்றினான்....

கதையானால் என்ன? கற்பனையானால் என்ன? சிலர் கூறுவது போல பொய்யெனத் தெரிந்தும் புனைந்துரைத்த புராணமானால் என்ன? செவிவழிச் செல்வமாக வந்த கர்ண பரம்பரைக் கதைகளானால் என்ன? அவைகள் வழியாக கூறப்படும் நீதி நிலைக்கு மானால் அந்தக் கதைகள் தொடரட்டும்!

★★★

# திரு அல்லிக்கேணியும், ஸ்ரீ பார்த்தசாரதி சுவாமியும்

– த. காவேரி, பி.ஏ., பி.எல்.
உதவி ஆணையாளர், செயல் அலுவலர், அருள்மிகு பார்த்தசாரதி சுவாமி திருக்கோயில்.

(மூலம் : ஸ்ரீ ப்ருந்தாரண்ய ஷேத்ர மகாத்மீயம் என்ற நூல்)

''திரிந்துலுஞ்சிந்தைதனைச் செவ்வேநிறுத்திப்
புரிந்து புகல்மின் புகன்றால் - மருந்தாம்
கருவல்லிக்கேணி யாமாக்கதிக்குக் கண்ணன்
திருவல்லிக்கேணி யான்சீர்''

திரு அல்லிக்கேணி என்றும், தற்காலம் திருவல்லிக்கேணி என்று வழங்கப்பட்டும் வரும் ஸ்தலத்திற்கு ''ஸ்ரீ ப்ருந்தாரண்ய க்ஷேத்ரம் ''- அதாவது துளஸிவனம், என வடமொழியில் பெயர். இந்த திவ்ய தேசம் தற்காலம் சென்னை நகரின் ஒரு பகுதியாக விளங்குகிறது. இது ஆழ்வார்களால் மங்களாசாசனம் செய்யப் பெற்ற நூற்றெட்டுத் திருப்பதிகளுள் ஒன்றாகி, ஸ்ரீ பேயாழ்வார், திருமழிசையாழ்வார், திருமங்கை மன்னன் ஆகிய மூவரால் பன்னிரண்டு பாசுரங்களால் சிறப்பிக்கப்பட்ட க்ஷேத்திரம்.

இந்தத் திருக்கோவில், சென்னை சென்ட்ரல் ஸ்டேஷனுக்கும், எழும்பூர் ஸ்டேஷனுக்கும் தென்கிழக்கில் சுமார் இரண்டு மைல் தூரத்தில் ரமணீயமான சமுத்ர கரைக்கு அருகாமையில் திருமங்கை மன்னன் மங்களாசாசனம் செய்தபடி 'வாவியும் மதிலும் மாட மாளிகையும், மண்டபமும்' கூடிய லக்ஷ்மிகரம் பொருந்திய திருவல்லிக்கேணி என்னும் பகுதியில் சன்னதியாக விளங்குகிறது. இங்கு கோயில் கொண்டிருக்கும் எம்பெருமான்கள் ஐவராவர் - இவர்கள் ஒவ்வொருவரையும் தனித்தனியே திருமங்கைமன்னன் பெரிய திருமொழியில் மங்களாசாசனம் செய்திருக்கிறார்.

'மாடமாமயிலை திருவல்லிக்கேணி' என்பதற்கு ஏற்ப இந்த க்ஷேத்திரத்திற்குத் தெற்கிலிருக்கும் மைலாப்பூரும் இந்த ஊரும் ஒருங்கு சேர்ந்து முன்பு இருந்தனவாகத் தெரிகிறது. மயிலாப்பூரில் அவதரித்த ஸ்ரீ பேயாழ்வார், இந்த திவ்ய தேசத்து எம்பெருமானை 'வந்துதைத்த வெண்திரைகள்' என்ற பாசுரத்தாலும், அவர் காலத்தையே சேர்ந்த ஸ்ரீ திருமழிசையாழ்வார் ''தாளால் உலகளந்த அசைவே'' என்ற பாசுரத்தாலும் இங்கு எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ வேங்கடகிருஷ்ண ஸ்வாமி என்கிற பார்த்தசாரதி பெருமாளையும் ஸ்ரீ மன்னாத ஸ்வாமி என்கிற சயன திருக்கோலத்திலுள்ள எம்பெருமானையும் மங்களாசாசனம் செய்திருக்கிற படியால், இந்த திவ்ய தேசம் மிகப் புராதனமானது என்பதில் ஐயமில்லை. ஸுமதி என்னும் மன்னனின் வேண்டுகோளுக்கிணங்கித் திருவேங்கடமுடையான் இங்கு அன்று அர்ஜுனனுக்கு ரதஸாரத்யம் செய்த அவசரத்துடன் தனது குடும்ப சமேதராய் சேவை சாதித்தார் என்பதையும் ஒன்று கூட்டி ஆராய்ந்தால், இந்த ஸன்னதி பல்லவ மன்னர்கள் காலத்திலேயே விஸ்தாரமாகக் கட்டப்பட்டதாயிருக்கவேண்டும் என்பது நிச்சயமாகிறது.

மற்றொரு கல்வெட்டு (ஏ.ஆர். 242) சோழ மன்னனான ராஜ ராஜ தேவரின் 23-வது ஆண்டில் ஏற்பட்ட ஒரு கைங்கர்யத்தைக் குறிப்பிடுகிறது.

ஒரு தெய்வ பக்தியுள்ள ஸ்ரீ வைஷ்ணவர் இவர்களின் சன்னதிகளைப் புதுப்பித்ததோடு, மடப்பள்ளி, திருவாய்மொழி மண்டபம், மதில் முதலியவைகள் கட்டி, புதுப்பாக்கம், வேப்பேரி, வியாசர்பாடி ஆகிய மூன்று கிராமங்களைப் பெருமாள் நித்ய கைங்கர்யத்திற்காக நன்கொடையாகக் கொடுத்ததாகவும் தெரிகின்றது.

1672-ம் வருடத்தில் முசாகான் என்பவர் இந்த கிராமத்திற்கு 50 பணம் வருட மாஸூல் அளித்ததாக சரித்திர ஆதாரமிருக்கிறது. பிறகு ஐரோப்பியர்களான, ஆங்கிலேயர், பிரெஞ்சுக்காரர், டச்சுக்காரர்கள் சென்னை பண்டகசாலையின் காரணமாக அநேகமுறை சண்டையிட்டபொழுது, திருஅல்லிக்கேணி இவர்களின் ஆதிக்கத்தின் கீழ் மாறிமாறி இருந்ததாகத் தெரிகிறது.

இந்த சன்னதி வெகு ரமணியமாக அமைக்கப்பட்டு, சமுத்ரக்கரைக்குக் கால் மைல் மேற்கே, வெகு சுந்தரமாகக் கட்டப்பட்டிருக்கும் ஓர் சிறிய திவ்ய தேசம். சன்னதியினைச் சுற்றி, வெகு நேர்த்தியாக அமைக்கப்பட்டுள்ள வீதிகளும், கோவிலுக்கு எதிரே ''கைரவிணி'' என்று புராணப்ரஸித்தமான, சிறிய நீராழி மண்டபத்துடன் கூடிய புஷ்கரணியுமிருக்கின்றன.

இந்த திவ்ய தேசத்திற்கு ஆழ்வார்கள் எழுந்தருளியது போல, பூர்வாசார்யர்களான, ஸ்ரீ பாஷ்யகாரர், ஸ்ரீ ஆளவந்தார், ஸ்ரீ வேதாந்த தேசிகர் முதலியவர்களும், சங்கீத சிம்மங்களான ஸ்ரீ தியாகராஜர், ஸ்ரீ தீக்ஷிதர் முதலியவர்களும் எழுந்தருளி கடாக்ஷித்ததாகத் தெரிகின்றது. தற்காலத்திலும் விஜயம் செய்யும் ஆஸ்தீக உத்தமர்கள் ஸ்ரீ பார்த்தசாரதியை கட்டாயம் சேவித்து விட்டுத்தான் போவது வழக்கம்.

மகத்வார கோபுரம் வெகு அழகாயும், புராணக் கதைகளை ஒட்டிய பிம்பங்களை உடையதாயும், சமீபத்தில் புனருத்தாரணம் செய்யப் பெற்றதாயும், ஐந்து அடுக்குகளையும் ஏழு கலசங்களையுடையதாயும் மிக கம்பீரமாக இருக்கிறது. முற்றத்தின் மத்தியில் முதலில் கல் தீபஸ்தம்பமும், தங்க முலாம் போடப் பெற்ற தகடுகளால் மூடப்பட்ட பலி பீடம், த்வஜஸ்தம்பமும் அதற்கு மேற்கில் பெரிய திருவடி சன்னதியும் வரிசையாக இருக்கின்றன. இவ்விடத்தில் சேவார்த்திகள் வடக்கு நோக்கியவாறு தெண்டன் சமர்ப்பித்து சேவிக்க வேண்டும். இதற்கு வலப்புற கல்யாண மண்டபத்தில் தான் விசேட உத்சவங்கள் நடைபெறுகின்றன. பவித்ரோத்சவம், நவராத்திரி கொலு உத்ஸவம், இராப் பத்து உற்சவம், ப்ரம்மோற்சவ காலங்களில் திருமஞ்சனம், அலங்காரம் முதலியவைகள் இங்கே நடக்கின்றன. கல்யாண மண்டபத்திற்குக் கிழக்கே யாக சாலையும் மேற்கே கண்ணாடி அறையுமிருக்கின்றன. கண்ணாடி அறைக்குத் தெற்கே ஸ்வர்க்க வாசலிருக்கிறது. இந்த வாசல் வழியாகவே தான் வைகுண்ட ஏகாதசி உத்சவம் 10 நாட்களில் பெருமாள் எழுந்தருளுவார்.

மஹா மண்டபத்தில் துவாரபாலகர்களைத் தாண்டி உள்ளே சென்றால் நேரே ஸ்ரீ பார்த்தசாரதி சுவாமி சன்னதியும், வலப்புறத்தில் ஸ்ரீ மன்னாதன், ஸ்ரீ சக்ரவர்த்தித் திருமகன் சன்னதிகளும் இடப் புறத்தில் சிறிய திருவடி சன்னதியும், ஆழ்வார்கள் சன்னதிகளுமிருக்கின்றன.

ஸ்ரீ மன்னாதன் ஸன்னதியில் வெகு கம்பீரமாக புஜங்க சயனத்தில் ஆதிசேஷ படலத்தில் பகவான் சயனத்திருக்கோலத்தில் கிழக்கே திருமுக மண்டலத்துடன் ஸேவிக்கலாம். தெற்கு திருமுக மண்டலத்துடன் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ சக்ரவர்த்தி திருமகன் ஸன்னதியில், ஆழ்வார் மங்களாசாசனப்படி பரதனும் தம்பி சத்ருக்னனும் இலக்குமணனோடு மைதிலியும் ஸ்ரீ சக்ரவர்த்தி திருமகனுடன் ஸேவை சாதிக்கிறார்கள்.

உள்ளே சென்றால் ஸேவிப்போர்களை ப்ரமிக்கச் செய்யும் கம்பீரமான மந்தஹாஸத்துடன் கூடிய ஸ்ரீ பார்த்தசாரதி மூலவரின் ஸேவை போல் எங்குமே கிடையாது என்று சொல்லலாம். ஸம்ப்ரதாயப்படி இங்கு த்ருவபேரமாக எழுந்தருளியிருக்கும் பெருமாளுக்கு ஸ்ரீ வேங்கடகிருஷ்ணன் என்றும், உத்ஸவ பேரமாயிருப்பவருக்கு ஸ்ரீ பார்த்தசாரதி என்றும் வெவ்வேறு திருநாமங்கள் வழங்குவதுண்டு. இதையொட்டியே சாதாரணமாக சன்னதிகளின் உத்ஸவர் வெளியில் எழுந்தருளியிருக்கிற காலங்களில் மூலவரை ஸேவிப்பது உசிதமில்லை என்னும் ஸம்ப்ரதாயம் இங்கு அனுஷ்டிப்பதில்லை.

மத்தியில் மிக உன்னதமாகவும், கம்பீரமாகவும் உத்தம தச லக்ஷணங்கள் பொருந்தியுமிருக்கும் ஸ்ரீ வேங்கடகிருஷ்ணஸ்வாமியை சேவிக்கலாம். ஸுமதி மன்னரின் பிரார்த்தனைக் கிணங்கி, ஸ்ரீ வேங்கடேசன் அர்ஜுனனுக்கு ரதஸாரத்யம் செய்த அவசரமாகையால், த்விபுஜத்துடன் வலது கையில் பாஞ்சசன்யத்தை (திருசங்கை) ஏந்தியும், இடது கை வரதஹஸ்தமாயும் நின்ற திருக்கோலத்தில் சேவை சாதிக்கிறார். பெருமாள் வலது பக்கத்தில் மிக அழகு தவழும் திருமுக மண்டலத்தையுடைய ஸ்ரீ ருக்மணி பிராட்டியார் நிற்கிறார். தாயாருக்கு வலது பக்கத்தில் வடக்கு நோக்கியவாறு ஒரு கையில் கலப்பையையும், மற்றொரு கையை வரத ஹஸ்தமாயும் வைத்துக் கொண்டிருக்கும் பலராமர் நிற்கிறார். பெருமாளுக்கு இடது பக்கத்தில் சாத்யகி கிழக்கு நோக்கியவாறும், ப்ரத்யும்னன் இருவரும் தெற்கு நோக்கியவாறும், பெருமாள் தமது குடும்ப ஸமேதராய் ஸேவை ஸாதிக்கிறார். மூலவரின் திருமேனியே ஸ்ரீமத் பகவத்கீதையின் ஸ்வரூபம் என்று பெரியவர்கள் கருதுகிறார்கள். வலது திருக்கையிலுள்ள பாஞ்சஜன்யம் கீதையில் முதல் அத்யாயத்திலுள்ள ''பாஞ்சஜன்யம் ஹ்ருஷீகேஸோ' என்னும் 15-வது ஸ்லோகத்தின் பொருளை உணர்த்தி, இடது திருக்கை வரத ஹஸ்தமாக இருப்பது மிகப் பிரபலமான 18-வது அத்தியாய சரமஸ்லோகமாகிய

ஸர்வதர்மாந் பரிந்யஜ்ய மாமேகம் ஸரணம் வ்ரஜ
அஹம் த்வா ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி
மாஸுச! (66-வது ஸ்லோகம்)

என்பதைப் பிம்பரூபத்தில் ப்ரதிபாலிக்கிறதாக பெரியோர்களின் ரகஸ்யார்த்தக் கொள்கை. பெருமாளை சாதாரணமாய் சேவித்தாலே ஸ்ரீ பகவத் பாராயணம் செய்த பலனடைவதாக கருத்து. முன்புறத்தில் உத்ஸவ மூர்த்தியான ஸ்ரீ பார்த்தஸாரதி ஸ்வாமி, ஸ்ரீ தேவி, பூதேவிகளாகிய உபய நாச்சியார்களுடன் எழுந்தருளியிருக்கிறார். எந்தத் திவ்ய தேசத்திலுமில்லாத வெகு வசீகரமான திருமேனியுடன், யுத்த பாணங்களால் ஏற்பட்ட வடு சின்னங்களோடு கூடிய புன்னகை

தவழ்ந்த திருமுக மண்டலத்தை உடைய இந்த எம்பெருமானின் சேவை கண்டு அனுபவிக்கத்தக்கது.

மூலவரின் திருவடிவாரத்தில் இதர பஞ்ச பேரங்களான நித்ய உத்ஸவர், பலிபேரம், ஸயனபேரம் ஆகிய மூன்று மூர்த்திகளும், நவநீத கண்ணனும், சுதர்சனமும் எழுந்தருளியிருக்கிறார்கள்.

சன்னதிக்கு எதிரேயிருப்பது தான் கைரவணீ புஷ்கரிணி. இதைப்பற்றி ஸ்தலபுராணம் மிக மேன்மை யாக் கூறுவதுடன்:-

''சடீர் வருஷ ஃகஸ்ராணி பாகீரத்யாவகாஹநாத் யத்பலம் வபதே கௌரீஸக்ருத் கைரவிணீஜலே''

என்று கங்கையையும் விட புனிதமானது என்று சிலாகிக்கிறது. கைரவிணியில் மத்ஸ்யங்கள் ஜீவிக்கிற தில்லை என்பது ஒரு அரிய விஷயம். ஸமுத்ர கரைக்கு அவ்வளவு அருகாமையிலிருந்தும் மத்ஸ்ய வகைகள் இந்த புஷ்கரிணி ஜலத்தில் ஜீவிக்க முடியாமலிருப்பது நோக்கத்தக்கது. இந்த புஷ்கரிணியில் தான் தெப்போத் ஸவம் ஏழு நாட்கள் வெகு விமரிசையாக நடை பெறுகிறது.

சன்னதிக்கு வடபுறமுள்ள பேயாழ்வார் கோவில் தெருவில் ஸ்ரீ பேயாழ்வாருக்கு பிரத்யேகமான சன்னதி யிருக்கிறது. இங்கு ஆழ்வாரும் ஸ்ரீ கண்ணபிரானும் எழுந்தருளியிருக்கிறார்கள். இந்த சன்னதிக்கு மேற்குப் புறத்தில் ஒரு சிறிய நந்தவனமிருக்கிறது.

**இந்தக் கோவிலில் நடக்கும் முக்கியமான வருடாந்திர உத்ஸவங்கள்**

| | | |
|---|---|---|
| 1. | சித்திரை | ஸ்ரீ பார்த்தசாரதி பிரம்மோற்சவம் 10 நாள். |
| 2. | வைகாசி | வசந்த உற்சவம் 7 நாள் |
| 3. | ஆனி | ஸ்ரீ நரசிம்மஸ்வாமி பிரம்மோற் சவம் 10 நாள் |
| 4. | ஆடி | திருவாடிப் பூரம் 10 நாள் |
| 5. | ஆவணி | பவித்ரோற்சவம் 7 நாள் |
| 6. | புரட்டாசி | நவராத்திரி ஒன்பது நாள் |
| 7. | ஐப்பசி | தீபாவளி உற்சவம் |
| 8. | கார்த்திகை | கைசிக ஏகாதசி. |
| | | பௌர்ணமியன்று திருக்கார்த்திகை உத்ஸவமான பிறகு பெருமாளுக்கு தைலக் காப்பு சமர்ப்பிக்கப்படு கின்றது. |
| 9. | மார்கழி | தனுர் மாஸம். அத்யயன உத்ஸவம் எனப்படும் பகல்பத்து, இராப்பத்து உத்ஸவங்கள் இருபது நாள் |
| 10. | தை | சங்கராந்தி. |
| | | தைப்பூசம் அன்று பெரிய தெருவுக்கு எழுந்தருளி கதிர் அலங்காரம் செய்து திரும்புதல் |
| 11. | மாசி | தெப்போற்சவம் ஏழு தினங்கள். |
| | | மாசி பௌர்ணமி அன்று சமுத்திரக் கரைக்கு எழுந்தருளல் |
| 12. | பங்குனி | ஸ்ரீ ராம நவமி 9 நாள் உற்சவம் |
| | | பல்லவ உற்சவம் பங்குனி உத்திரத் தில் முடியுமாறு 5 தினங்கள். பங்குனி உத்திரத்தன்று தாயார் கல்யாண உத்ஸவம். யுகாதி உத்ஸவம். |

வருடத்திற்கு ஒருமுறை பிப்ரவரி மாதம் ஒரு ஞாயிற்றுக்கிழமையில் ஈக்காடுதாங்கல் எழுந்தருளி பிறகு சன்னதிக்கு திரும்பி எழுந்து அருளுகிறார்.

''கலௌ வேங்கட நாயகம்'' என்றும் ''க்ருஷ்ணம் வந்தே ஜகத்குரும்'' என்றும் மஹான்களால் போற்றப் பெற்ற ஸ்ரீ வெங்கடேஸனும், ஸ்ரீ கிருஷ்ணனுமாகிய இரண்டு திவ்ய மூர்த்திகள் ஒன்று திரண்டு ஓர் உருவ மாய் ''ஸ்ரீ வேங்கடகிருஷ்ணன்'' என்ற திருநாமத் துடன் எழுந்தருளியிருக்கும் இந்த திவ்ய தேசம், சென்னை நகரத்தில் உள்ளவர்களுக்கும், வருபவர் களுக்கும், அவசியம் சேவிக்க வேண்டிய க்ஷேத்திரமாக விளங்குகிறது.

★★★

## தர்மமும் நியாயமும் வேரூன்றட்டும்

தாய் வயிற்றிலிருந்து வெளிப்பட்டு தொப்புள் கொடி அறுந்ததும் முற்பிறவி நினைவுகள் அற்றுப் போய்விட்டது!

பிள்ளைகள் வளர்ந்து பெரியவர்கள் ஆனதும் கடமைகளைப் பற்றிக் கொண்டதால் காமசுகம் அற்றுப் போய்விட்டது!

முதுமை நிலை வந்து எல்லாமே மாயை என உணர்ந்து இறைவனைப் பற்றிக் கொண்டதும் எல்லாமே அற்றுப் போய்விட்டது!

பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு!

– குறள்

# இளையாழ்வாரைக் காத்த பேரருளாளன்

- புலவர் ஏ. பரந்தாமன், எம்.ஏ., பி.எட்.

தமிழகத்தில் தோன்றிய மதாச்சாரியர்கள் மூவருள் விசிஷ்டாத்துவத்தை பரப்பித் திருமால் நெறியினைக் கடைப்பிடித்து ஸ்ரீவைஷ்ணவத்தை வளர்த்த பெருமை இராமாநுஜரையே சாரும். எனவே ஸ்ரீவைஷ்ணவத்தை எம்பெருமானார் தரிசனம் என்றே பெயரிட்டார் நம் பெருமாளாகிய திருமால் என்கின்றார் மணவாள மாமுனிகள்.

''எம்பெரு மானார் தரிசன மென்றே யிதற்கு
நம்பெருமான் பேரிட்டு நாட்டிவைத்தார் - அம்புவியோர்
இந்தத் தரிசனத்தை எம்பெருமானார் வளர்த்த
அந்தச் செயலறி கைக்கா''

(உபதேச ரத்தின மாலை)

இத்தகைய சிறப்பு வாய்ந்த, கருணையே வடிவான இராமாநுசரின் இளம் பருவத்தில் நிகழ்ந்த ஓர் அதிசயிக்கத்தக்க நிகழ்ச்சியை இங்குக் காண்போம்.

இராமானுஜர் ஸ்ரீபெரும்புதூரில் அவதரித்தார். இவரது மாமா திருமலை நம்பி எனபவர் இவருக்கு ''இளையாழ்வார்'' என்று பெயர் சூட்டினார். காஞ்சிபுரத்திற்கு அருகேயுள்ள ''திருப்புட்குழி'' என்னும் திருப்பதியில்'' யாதவப் பிரகாசர் என்னும் குருவிடம் கல்வி கற்க ஏற்பாடுகள் செய்தார்.

''விளையும் பயிர் முளையிலே தெரியும்''
''துளசிச் செடி முளைக்கும் போதே நறுமணம் பெற்றிருக்கும்''

என்றபடி இவர் இளமை முதலே மெய்யறிவு பெற்றிருந்தார். குருவின் தவறான பொருளுரையை மறுத்து, சரியான பொருள் கூறிவந்தார். இதனைக் கண்ட குருவான யாதவர் பிரகாசர் இவரது அறிவுக் கூர்மையைப் பாராட்டாமல், மாறாக இவர் மீது கோபமும் வெறுப்பும் அடைந்து வந்தார். தமது பெருமைக்கு இளையாழ்வார் களங்கம் கற்பிப்பதாக நினைத்து வந்தார்.

இளையாழ்வார் ஒருநாள் குரு யாதவப் பிரகாசருக்கு எண்ணெய் தேய்த்துக் கொண்டிருந்தார். அப்பொழுது அவரிடம் கிழ்கண்ட சூத்திரத்திற்குப் பொருள் சீடர்களால் கேட்கப்பட்டது.

''தஸ்ய யதா கப்யாஸம் புண்டரீக, மேவமக்ஷினி''

கதிரவன் ஒளி கண்டு மலர்ந்த செந்தாமரை மலர் போன்ற அழகிய திருமுகம், திருமாலின் திருமுகம் என்று பொருள் கூறுவதற்கு மாறாக: குரங்கின் பின்புறம் போன்ற சிவந்த முகம் என்று இழிவான உவமையைக் கூறினார் யாதவப் பிரகாசர். இதைக் கேட்ட இளையாழ்வார் மனம் வருந்தி கண்ணீர் வடித்தார். இளையாழ்வார் கண்ணீர் குருவின் தொடையில் விழுந்தது. இதைக் கண்ட குரு காரணம் கேட்டார். எம்பெருமான் தாமரைக் கண்ணன் திருமுக அழகினுக்குத் தாங்கள் சொன்ன இழிவான உவமை என் மனத்தைப் பெரிதும் வாட்டியது, துக்கம் தாங்காமல் கண்ணீர் வந்துவிட்டது என்றார். இதைக் கேட்ட குரு சிந்தித்துச் செயலாற்றுவதற்குப் பதிலாக பொறாமையை வளர்த்துக் கொண்டார். இனி இளையாழ்வாரைக் குருகுலத்தில் வைத்திருந்தாலும், (அல்லது) உயிரோடு விட்டு வைத்தாலும் ''தமது பெருமைக்கும் அத்வைதக் கொள்கைக்கும் இழுக்கு நேரிடும்'' என்று நினைத்து அவரைக் கொன்று விடத் திட்டமிட்டார்.

''சிஷ்யன் ஆருயிரைப் பேணுபவன் ஆச்சாரியன்''

என்ற வாசகத்திற்கு ஏற்ப, இளையாழ்வாரைக் காத்து, அவரது மெய்யறிவை மேலும் வளர்ப்பதற்கு விருப்பமின்றி, மாறாக அவரைக் கொல்வதற்கே திட்டமிட்டு, குருவின் இலட்சணத்திற்கே களங்கம் ஏற்படுத்தி விட்டார். காசியாத்திரைக்கு ஏற்பாடு செய்து, கங்கையாற்றில் கொன்று விடத் திட்டமிட்டு, காசி யாத்திரையைத் தொடங்கினார்.

குருவின் வஞ்சகத்தை உணராத இளையாழ்வார் தாயின் அனுமதியுடன் காசியாத்திரை புறப்பட்டார். இளையாழ்வாருடன் அவரது சிறிய தாயார் மகன் கோவிந்தர் யாதவப் பிரகாசரிடம் கல்விபயின்று வந்தார். அவரும் காசியாத்திரையில் கலந்து கொண்டார். பயணம் துவங்குமுன் தமது திட்டத்தை ரகசியமாக, இளையாழ்வார் தவிர மற்ற மாணவர்களுக்குத் தெரிவித்தார் குரு.

பயணம் விந்திய மலையை அடைந்தது. கதிரவன் மறையும் மாலை நேரமாயிற்று. இளையாழ்வாரும் கோவிந்தரும் தனித்துச் செல்ல ஓர் வாய்ப்பு ஏற்பட்டது. இத்தருணத்தைப் பயன்படுத்திக்கொண்ட கோவிந்தர்

குருவின் கொலைத் திட்டத்தை, இளையாழ்வாருக்குத் தெரிவித்து, திசைமாறி தப்பிக்கும்படி வேண்டினார். சகோதரனின் வேண்டுகோளுக்கு இணங்கி வழி மாறினார் இளையாழ்வார். சற்று நேரத்திற்கெல்லாம் இருட்டிவிட்டது.


''கண்ணைக் கட்டி காட்டில் விட்டது போல''

இளையாழ்வார் நடுக்காட்டில், இருட்டில் யாரும் துணை இன்றி தவித்து நின்றார். எந்த வழியும் அறிய இயலாத இருட்டில் செய்வதறியாது தேம்பி அழ ஆரம்பித்தார்.

இளையாழ்வாரைக் காணாத குரு, ''உள் ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவார்'' போல: இங்குமங்கும் மாணவர்களுடன் சேர்ந்து தேடினார். இளையாழ்வாரைக் காணவில்லை. இருட்டி விட்டது எனவே பயணத்தைத் தொடர ஆரம்பித்தார். உள்ளூர மகிழ்ந்தார். பசுத்தோல் போர்த்திய புலியைப் போலவும் தன் பொய்யான வருத்தத்தைத் தெரிவித்தார்.

அழுது புலம்பிய இளையாழ்வார் தானாகவே மனம் தேறி, துணைக்கு யாராவது கிடைக்க மாட்டார் களா என்று சுற்று முற்றும் பார்த்தார். இளையாழ்வார் அழுகுரல் காஞ்சிவாழ் ''பெருந்தேவியாருக்கும், பேரரு ளாளனுக்கும் கேட்டது.''

ஆபத்பாந்தவனான பேரருளாளனும், பெருந் தேவித் தாயாரும், வேடுவன் - வேடுவச்சி வேடம் தாங்கி, விந்திய மலைக் காட்டில் இளையாழ்வார் முன் தோன்றினர். தனித்து நின்று திகைத்துக் கொண்டிருந்த இளையாழ்வாரைக் கண்டு விசாரித்தனர். குருவால் கைவிடப்பட்ட இளையாழ்வார், வேடுவனையும் வேடுவச்சியையும் கண்டவுடன் பெருமகிழ்ச்சி அடைந் தார். அவர்களின் கால்களை கட்டிப்பிடித்துக்கொண்டார். பிள்ளை - பெற்றோர் பாசம் பெருகுகிறது. வேடுவனும் வேடுவச்சியும் இளையாழ்வாரை அழைத்துக் காண்டு, தங்களால் உருவாக்கப்பட்ட திடீர் குடிசைக்குச் சென்றனர். இளையாழ்வாருக்குத் தேனும், தினைமாவும், நீரும் அளித்து பசியாற்றி, உறங்க வைத்தனர். பயணக் களைப் பால் இளையாழ்வார் உறங்கிவிட்டார். விடியற்காலை யில் வேடுவச்சி வேடனிடம் தண்ணீர் வேண்டு மென்றாள். இந்த நடுக்காட்டில் இந்த இரவில் எங்கு சென்று தண்ணீர் தேடுவது, விடியட்டும் என்று சொன்னான் வேடுவன். விழித்துக் கொண்டு படுத்திருந்த இளையாழ்வார் இவர்கள் உரையாடல்களைக் கேட்டு எழுந்தார். அதோ ஏற்றப் பாட்டின் ஒலி கேட்கின்றது. அங்கு சென்று தண்ணீர் கொண்டு வருகின்றேன் என்று புறப்பட்டார். இரவோடு இரவாக வேடுவன், வேடுவச்சி இளையாழ்வார் மூவரும் காஞ்சிபுரத்திற்கு அருகே வந்து சேர்ந்தனர். ஏற்றப் பாட்டின் ஒலியைத் தொடர்ந்து சென்று, கிணற்றை அடைந்தார். தண்ணீர் எடுத்துக்



கொண்டு ஏற்றம் இறைப்பவர்களை இது எவ்வூர் என்று கேட்டார். ''இது காஞ்சீபுரம், இதுதான் சாலைக் கிணறு. அதோ பேரருளாளர் கோயில் கோபுரம் தெரி கிறதே!'' என்றனர். இதைக் கேட்டுத் திரும்பிப்பார்த்தார். விந்திய மலைக்காடும், வேடுவன் வேடுவச்சியும் காணப்படவில்லை. நம்மை விந்திய மலைக் காட்டி லிருந்து காஞ்சிக்கருகே கொண்டு வந்து சேர்த்தது, இரவு தனக்கு உணவும், உறைவிடமும் தந்து காத்தது, பேரருளாளனும், பெருந்தேவித் தாயாருமே என்று அறிந்து ஆனந்தம் அடைந்தார்.

அங்கிருந்து தண்ணீருடன் பேரருளாளன் திருக் கோயில் சென்றடைந்து, தான் கொணர்ந்த தண்ணீரை பெருமாள் - பிராட்டியார் திருமஞ்சனத்திற்கு (நீராட்டு) அளித்து, இருவரையும் வணங்கி நின்றார். நடந்ததை கோயில் அர்ச்சகர்களிடமும், நிர்வாகிகளிடமும் சொன் னார். இனி திருமஞ்சனத்திற்கு சாலைக் கிணற்றுத் தண் ணீரைக் கொண்டு வந்து தரும் பணியைத் தனக்கு அளிக்க வேண்டுமென வேண்டிப் பெற்றுக்கொண்டார். அன்று முதல் அப்பணியை ஏற்றார்.

இதனால், குருவானவர்தனது சிஷ்யன் உயிரைக் காக்கும் குருவின் தகுதிக்கு மாறாக நடந்தால், அவரது தீய எண்ணங்கள் இறைவனால் முறியடிக்கப்படும் என்பதும், அடியவர்கள் துயரம் தக்க சமயத்தில் நீக்கப் படும் என்பதும், அடியவர்களை ஆண்டவன் காத்து ரட்சிப்பான் என்பதும் புலனாகிறது. எனவே எச்சூழ் நிலையிலும் நேர்மை தவறாது, இறைவனை வழிப் பட்டால் இறைவன் திருவருள் கிட்டும் என்பதும் புலப்படுகிறது.

''அத்திகிரி யருளாளன் அடி பணிந்தோன் வாழியே!
சீர் பெரும்பூதூர் முனிவன் திருவடிகள் வாழியே!''

★★★

# சிவமாலை

- டாக்டர் சிவப்பிரியா, தில்லிப் பல்கலைக்கழகம்.



அரிஅயனாகி அகிலம்காத்து
அரனாய்நிற்பது நமசிவாயம்
அன்பேசிவமாய் அருளேவடிவாய்க்
கருணைபொழிவது நமசிவாயம்
ஆதியுமின்றி அந்தமுமின்றி
அனைத்துமானது நமசிவாயம்
ஆலம்உண்டு ஞாலம்காத்த
நீலகண்டம் நமசிவாயம்
இகபரசுகமே யாவையும்தருமே
இமையவர் போற்றும் நமசிவாயம்
இன்னல்கள்நீக்கி இன்பங்கள் தந்து
இசையினில் மயங்கும் நமசிவாயம்
ஈசனாய்இருந்து நேசரைக்காக்கும்
பாசம்கொண்டது நமசிவாயம்
ஈரேழுலகிற்கும் தந்தையாயிருந்து
தாயுமானது நமசிவாயம்
உற்றார்உறவினர் ஒருவரின்றி
ஒளிமயமானது நமசிவாயம்
உருவம்அருவம் எதுவுமின்றி
அருவுருவானது நமசிவாயம்
ஊழ்வினைவிலக்கி வாழ்வினை அருளி
உயிர்களைக் காப்பது நமசிவாயம்
ஊழிமுதல்வனாய் முடிவினில் ஒருவனாய்
ஆழியான் போற்றும் நமசிவாயம்

எங்கும்இருப்பது பொங்கும்கங்கையும்
பிறையும்புனைந்தது நமசிவாயம்
எவரெவர் விரும்பினும் அப்பொருள்வடிவில்
அவர்முன் வருவது நமசிவாயம்
ஏவரும்மூவரும் யாவரும்அறியாத்
திருமலர்ப்பாதம் நமசிவாயம்
ஏழையின்நாயகன் என்றேசொல்லும்
எளிமையின்கோலம் நமசிவாயம்
ஐங்கரன் அறுமுகன் ஐயப்பன்வடிவாய்
அவரவர்காண்பது நமசிவாயம்
ஐந்தொழில்புரிந்து அகிலம்காக்கும்
அருட்பெருஞ்சோதி நமசிவாயம்
ஒளிநீர்வளியாய் விண்மண்பெண்ணாய்
அலியாய்நிற்பது நமசிவாயம்
ஒருவனே உலகில் ப லவடிவானான்
என்பதைஉணர்த்தும் நமசிவாயம்
ஓதியும்உணரா வேதமும்காணா
ஆதிவடிவே நமசிவாயம்
ஓடியும்உருகியும் பாடியும்வந்தால்
நாடியேவருவது நமசிவாயம்
ஔஷதம்போன்று அனைவரின்பிணியைத்
தீர்க்கும்பொருளே நமசிவாயம்
ஔவையின் குருவாம் அறுமுகன் தன்னை
அன்புடன்ஈன்றது நமசிவாயம்!

★★★

# லிங்கத்திலே திருமேனிகள்

- பேராசிரியர் டாக்டர் டி. செல்வராஜ், பொன்னேரி

**லிங்கம்**

லிம் + கம் = லிங்கம். லிம் = ஒடுக்கம்; கம் = தோற்றம். உலகப் பொருள்கள் அனைத்தும் தோன்றி ஒடுங்குமிடம், ஒடுங்கி மீண்டும் தோன்றுமிடம் லிங்கம். இது உருவமும் அன்று, அருவமும் அன்று, அருவுருவம்.

**மும்மூர்த்திகள்**

லிங்கத்தின் நான்கு பட்டைகள் இருக்கின்ற பகுதி பிரமபாகம்; இது அடிப்பகுதி. எட்டுப்பட்டைகள் இருக்கின்ற பகுதி விஷ்ணு பாகம்; இது இடைப்பகுதி. ஆவுடை என்ற பீடத்தினுள் அமைந்திருப்பது இப் பகுதி. இதற்கு மேல் நீள்வட்ட வடிவமாய் விளங்கு கின்ற பாணப்பகுதியே சிவபாகம் அல்லது ருத்ர பாகம். எனவே, லிங்கத்தில் மும்மூர்த்திகளும் உறைகின்றனர் என்பது தெளிவாகிறது. நீர்வழியுமிடம் மனோன்மணி அல்லது நாளம்.

**பழமை**

லிங்க வழிபாடுகள் காலத்தைக் கணிக்க முடி யாத பழமை வாய்ந்தது. சிந்து வெளி முதலிய மிகப் பழங்கால இடங்களில் செய்த அகழ்வாராய்ச்சி களில் லிங்க வடிவங்கள் கிடைத்திருக்கின்றன. இதன் பழமைக்குப்பழைய லிங்க வடிவங்களே சான்றுக ளாகும். லிங்கம், சிவ அல்லது ருத்ர வழிபாடுகள் பழமைச்சிறப்புடையவை.

**மகாலிங்கம்**

திருச்செங்கோட்டின் மூலவர் அர்த்த நாரீசுவரர். திருமேனி வடிவம். இப்படி ஓரிரு திருத்தலங்களில் மட்டுமே திருவுருவத்திருமேனிகள் மூலவராக வீற்றிருப் பதைத் தரிசிக்கலாம். மற்ற எல்லாத் திருத்தலங்களில், சிவன் கோயில்களின் மூலவர் லிங்கேசுவரரே. இவ ருக்கு ஒவ்வொரு திருக்கோயிலிலும் ஒவ்வொரு திருப்பெயர் வழங்குகின்றது. ஆனால், திருவிடை மருதூரில் எழுந்தருளியுள்ள மூலவருக்கு மட்டும் ''மகாலிங்கம்'' என்பதே பெயர்.

**1. லிங்கத்திலே லிங்கங்கள்**

லிங்கத்தோடு தொடர்புடைய திருமேனிகள் இருப்பது அபூர்வம்; அதிசயமும் கூட. அவற்றை இனிக் காணலாம்.

*1) அஷ்டோத்தர லிங்கம்*

ஒரே லிங்கத்தில் நூற்றெட்டு லிங்கத்திருமேனி கள் இருப்பது அஷ்டோத்தர லிங்கம். இந்த வகை லிங்கங்கள் சிதம்பரம், திருவொற்றியூர், காஞ்சிபுரம் முதலிய திருத்தலங்களில் இருக்கின்றன.

**2. சகஸ்ர லிங்கம்**

பலாப்பழத்தின் புறத் தோற்றத்தைப் போல ஒரே லிங்கத்தில் ஆயிரத்தொன்று அல்லது ஆயிரத் தெட்டு சிறு சிறு லிங்கங்கள் இருப்பது சகஸ்ர லிங்கம். இதனைத் திருக்காளத்தி, திருவிரிஞ்சை, திருவலம், திருவானைக்கா, குடந்தை (கும்பேசுவரர் கோயில்) முதலியவற்றில் தரிசிக்கலாம்.

**3. கோடி லிங்கம்**

உருத்திராட்ச மணியின் புறத் தோற்றத்தைப் போல ஒரே லிங்கத்தில் கோடி லிங்கங்கள் இருப்பது ''கோடி லிங்கம்''. இது மிகவும் அபூர்வமான திருமேனி. இத்திருமேனியின் இருப்பிடம் கொட்டையூர்; இறை வனது பெயர் 'கோடீசுவரர்'.

பல லிங்கங்கள் புனையப்பட்ட ஒரே லிங்கத் தைத்தரிசிப்பதால், பல லிங்கங்களைத் தரிசித்த பலன் கள் கிடைக்கின்றன.

**2. முகலிங்கம்**

சிவனுக்குச் சத்யோஜாதம், அகோரம், தத் புருஷம், வாமதேவம், ஈசானம் என்று ஐந்து முகங்கள் இருக்கின்றன. இந்த முகங்களை லிங்கத்தில் வடிப்பது 'முகலிங்கம்'. சிவலிங்கங்களில் சிவனின் திருமுகங் களைத் தரிசிப்பது ஒரு வேறுபட்ட பக்திப்பரவசந்தான். லிங்கம் என்ற அருவுருவத்திருமேனியில், திருமுகம் என்ற உருவத் திருமேனி உள்ளது.

1. ஒரு முகலிங்கம் - சிதம்பரம்; திருவண்ணாமலை; சுசீந்திரம்.
2. இரண்டு முகலிங்கம் - எங்கும் இருப்பதாகத் தெரியவில்லை.
3. மூன்று முக லிங்கம் - எலிபெண்டா குகை. திண்டிவனத்துக்கருகில் திருவக்கரை - சந்திர மௌலீசுவரர் கோயில் - மூன்று முக லிங்கம் -

மூலவர். இந்த அமைப்பு வேறு எந்தத்திருத் தலத்திலும் இல்லை.

4. நான்கு முகலிங்கம் - திருவதிகை; திருவண்ணா மலை திருவானைக்கா; திருக்காளத்தி; காஞ்சிபுரம் (கச்சபேசுவரர் கோயில்)

5. ஐந்து முகலிங்கம் - திருவிரிஞ்சிபுரம், மார்க்க சகாயர்கோயில்.

சிவனின் ஐந்து முகங்களில் நான்கு திசைகளில் நான்காகவும், மேல் நோக்கிய முகம் (ஊர்த்துவ முகம்) ஒன்றாகவும் அமைகின்றன. கீழ் நோக்கிய ஆறாம் முகம் 'அதோமுகம்'. இது மறைவானது; பேராற்றலுடையது. ஆறுமுகலிங்கம் இல்லை. ஆனால், இந்த ஆறுமுகங் களுடன் திருக்காட்சி தருகின்ற சிவபெருமானே முருகப் பெருமான் ஆவார். அதாவது ஆறு முகச்சிவனே முருகன். சிவனும், முருகனும் வெவ்வேறானவர் அல்லர்; ஒருவரே. இது சான்றோர் கொள்கை,

### 3. லிங்கத்திருமேனிகளில் தெய்வத் திருமேனிகள்

லிங்கங்களில் சிவனின் திருமுகங்கள் மட்டு மல்ல வேறு தெய்வங்களின் திருமேனிகளும் இருப்ப துண்டு. தெய்வங்களை லிங்கத்துடன் ஐக்கியப்படுத்திக் காண வேண்டும் என்ற ஆசையால், ஆர்வத்தால் இத் தகைய திருமேனிகள் உருவாகின்றன.

1. லிங்கத்திலுள்ள விநாயகரைத் திருவானைக் காவில் காணலாம். சைவம், காணபத்யம் இணைப்பு.

2. லிங்க முருகனைத் திருவானைக்காவிலும், நெய்வேலிக்கருகில் வில்லுடையான் பட்டியிலும் தரிசிக்கலாம். சைவம், கௌமாரம் இணைப்பு.

3. பிடாரியைப் பாணப்பகுதியில் கொண்ட சக்தி லிங்கம் இருக்குமிடம் காஞ்சிபுரம், சைவம் சாக்தம் இணைப்பு.

4. காஞ்சிபுரத்திற்கருகில் திருப்பாற்கடல் என்ற திருத்தலத்தில் லிங்க ஆவுடையார் மேல், விஷ்ணு சங்கு, சக்கரத்துடன் சேவை சாதிக்கின்றார். சைவம், வைணவம் இணைப்பு.

லிங்கத்துடன் தொடர்புடைய மேற்கண்ட திருமேனிகள் அனைத்தும் மிக அபூர்வமானவை; இரட்டைப் பரம் பொருள்கள் இணைந்த சங்கமம்.

அடுத்து, லிங்கத்தில் ரகசியமாகப் பிரசன்ன மாகும் ஓர் அம்மனைத் தரிசிப்போம்.

தென்னாற்காடு மாவட்டம் கள்ளக்குறிச்சி யிலிருந்து திருக்கோவிலூருக்குச் செல்கின்ற வழியில் 'ரிஷி வந்தியம்' என்ற திருத்தலம் உள்ளது. இங்குள்ள அர்த்தநாரீசுவரர் கோயிலின் மூல லிங்கம் மற்ற லிங்கங் களைப் போலவே இயல்பான தோற்றமுடையது. தினமும் அர்த்தயாமப் பூசையில் இதற்குத் தேன் அபிடேகம் நடைபெறுகின்றது. அப்போது லிங்கத்தின் பாணப்பகுதியில் அம்மனின் நிழலுருவம் மெல்லப் பிரசன்னமாகி, தேன் வழிந்ததும் மெல்ல மறைகின்றது. சிவத்துள் பரிபூரணமாய் நிறைந்துள்ள சக்தி தேவைப் படுகின்றபோது தானே வெளிப்படும்; செயல் முடிக்கும்; மறையும்.

திருந்துதேவன் குடியிலும் இதே போல ஓர் அதிசயம் நிகழ்கின்றது. நண்டு பூசித்துப் பேறு பெற்ற திருத்தலம் இது. ஒரே நிறப் பசுக்களின் பால் பதின் கலத்தை லிங்கத்தின்மேல் அபிடேகம் செய்தால், அந்த லிங்கத்தில் பொன்னிற நண்டு ஊர்ந்து செல்வது தரிசன மாகின்றது. நண்டு ஊர்ந்து செல்வது தரிசனமாகின்றது. இவ்வாறு லிங்கத்திருமேனிகளில் ஒடுங்கியுள்ள அதிசய ரகசியங்கள் சில உள்ளன.

### 4. லிங்கோற்பவர்

சிவன் கோயில்களிலுள்ள கருவறையின் மேற்கில், வெளிப்புறக் கோட்டத்தில் லிங்கோற்பவ மூர்த்தியைத் தரிசிக்கலாம்.

கொழுந்துவிட்டுப் பிரகாசிக்கின்ற தீயின் நடுப் பகுதியில் ஒரு நீண்ட வட்ட வடிவமான அமைப்பு தோன்றுவதைக்காணலாம். இதனையே லிங்கம் என்று கொண்டனர். இந்த லிங்கத்தில் தோன்றுகின்ற மூர்த்தியே - சந்திர சேகர மூர்த்தியே - லிங்கோற்பவ மூர்த்தி. அனற்பிழம்பில் எழுந்தருளுகின்ற திருமேனி.

மேலும், லிங்கத்தின் உச்சியின் வலப்புறத்தில் பிரமன் அன்னப்பறவையாகவும், லிங்கத்தின் அடியின் இடப்புறத்தில் விஷ்ணு ஒரு வராகமாகவும் அமைக்கப் பட்டிருக்க வேண்டும். அடுத்து, லிங்கத்தின் இடப் பக்கம் விஷ்ணுவும், வலப்பக்கம் பிரமனும் லிங்கோற் பவரை வணங்கியபடி நின்றிருக்க வேண்டும். இவ் வாறு லிங்கத்தில் சந்திர சேகரரும், பிரமன் - அன்னம், விஷ்ணு - வராகம் என்ற திருவுருவங்கள் அந்த லிங்கத்தைச் சூழ்ந்திருப்பதும் அற்புதமாகத் திருக்காட்சி தருகின்றன.

### 5. தாணுமாலயன்

லிங்கத்தில் மும்மூர்த்திகளும் உறைகின்றனர் என்பதை முன்னரே கண்டோம். ஆகவே, லிங்க வழிபாடு என்பது மும்மூர்த்திகளையும் ஒருங்கே வழிபடுவது ஆகும். சுசீந்திரம் ''தாணுமாலயனும்''

மும்மூர்த்திகளின் ஐக்கியம். தாணு - சிவன்; மால் - விஷ்ணு; அயன் - பிரமன். இவரை - தாணுமாலயனை - வழிபடுவதும் மும்மூர்த்தி வழிபாடே. இத்தகைய அமைப்பை வேறு திருத்தலங்களில் தரிசிக்க முடியாது. னிச் சிறப்புடைய லிங்கம்.

### 6. லிங்கத்தில் உடும்பு

''வளையை ஓர் உடும்பு பற்றிக் கொண்டிருப் பதைப்போலக் குடுமித்தேவரை விடாமல் பற்றிக் கொண்டிருக்கின்றார் கண்ணப்ப நாயனார்'' என்று வருணிக்கின்றார் சேக்கிழார் சுவாமிகள்.

பிடித்த பிடி விடாதது உடும்பு. பேச்சு வழக்கில் ''உடும்புப்பிடி'' என்று இயல்பாகவே வழங்குகின்றது.

காஞ்சிபுரத்திற்கு அருகிலுள்ள திருமாகறல் என்ற திருத்தலத்தில் மூல லிங்கத்தை ஓர் உடும்பு தழுவிக்கொண்டிருக்கிறது. கண்ணப்ப நாயனாரைப் போல, இராசேந்திர சோழனுக்குமுன் இறைவன் பொன் உடும்பாகக் காட்சியளித்தார். அவன் துரத்தவும் ஓடிப் புற்றில் ஒளிந்துகொண்டார். பின்னர் வெளிப்பட் டருளினார். புற்றுக்குள் நுழைந்த உடும்பு போல ஒரு வடிவம் லிங்கத்துக்கருகில் இருக்கின்றது.

திருமாகறல் உடும்பு வழிபட்ட திருத்தலம். லிங்கத்தைத்தழுவிய உடும்பு வடிவம் திருத்தலச் சிறப்பியல்பு.

சிவன் கோயில்கள் பலவற்றில் உடும்பு, குரங்கு, பல்லி முதலிய வடிவங்களைக் காணலாம். இவை மூன்றும் பற்றிக்கொண்டதை விரைவில் விடாத பண்புடையன. பக்தி நெறியினை இவை மூன்றும் நுட்பமாய்த் தெரிவிக்கின்றன. உடும்புப் பிடிபோல் மனத்தால் இறைவனை அழுந்தப்பற்றிக் கொண் டிருப்பதே மிகச் சிறப்பான பக்தி. லிங்கத்திலுள்ள உடும்பு இந்தப் பக்தியை உணர்த்துகின்ற ஓர் அறி குறியே. குரங்கு, பல்லி வடிவங்களும் இதே கருத்தை வழிமொழிகின்றன.

### 7. லிங்கமும் ஐயப்பனாரும்

சிவனின் ஒரு மகன் ஐயப்பன். தந்தையின் தோற்றப் பொலிவு மகனிடத்தில் பொருந்தலாம் அல்லவா? ஐயப்பனின் அமர்ந்த அமைப்பை உற்றுக் கவனித்தால் ஒரு லிங்கத்தின் வடிவம் புலனாவதைக் காணலாம். ஐயப்பனின் வடிவத்தில் லிங்கத்தின் சாயல் உள்ளது. திருமுகம் லிங்கத்தின் பாணமாகவும், இடக் கை மனோன்மணியாகவும் விளங்குகின்றன. வெளிப் படத் தோற்றமளிக்காத ஒரு லிங்கம் பின்னணியாகத் திகழ ஐயப்பனின் அமர்ந்த திருக்கோலம் தரிசன மாகின்றது.

### 8. திருமேனிகளில் லிங்கம்

முன்னர் லிங்கத்தில் அமைந்த திருமேனி களைப்பற்றிக் கண்டோம். இனி உருவத்திருமேனிகளில் அமைந்த லிங்கங்களைப்பற்றிக் காணலாம்.

1. சிவனின் திருமேனியில், தோளில் ஒரு சிறு லிங்கத்தை வடிப்பது பழைய வழக்கம். இந்த அமைப்பு காஞ்சிபுரம் முக்தீச்சுரக்கோயிலில் காணப்படுகின்றது. (இரண்டு புடைப்புச் சிற்பங் கள்)
2. பிள்ளையார்பட்டி கற்பக விநாயகரின் வலக்கை யில் இருப்பது ஒரு லிங்கம்.
3. தஞ்சைப் பெரிய கோயிலில் ஓர் அசுரன் லிங்கத்தைத் தாங்குகின்றான்.
4. சென்னைக்கருகிலுள்ள கவரப்பேட்டை என்ற ஊரிலிருந்து மூன்று கிலோமீட்டர் தூரத்தில் இருக் கின்றது அரியதுறை. இங்குள்ள சிவன் கோயிலில் திருஞான சம்பந்தர் தலையில் சூடிக் கொண் டிருப்பது ஒரு நாகலிங்கம். இது அரிய ஐம்பொன் சிலை, படம் *(1)*
5. ''உள்ளம் பெருங்கோயில்'' என்றார் திருமூலர். திருநின்றவூரைச் சார்ந்த பூசலார் நாயனார் உள்ளக் கோயிலிலே மற்றொரு கோயிலைக் கட்டி, இறைவனை அதில் எழுந்தருளச் செய்தார். எனவே, இறைவனது திருப்பெயர் ''இருதய கமல நாத ஈசுவரர். நாயனாரது செப்புச்சிலை வடிவ மொன்றில், அவரது மார்புக்கு நேராகத்திகழ் கின்றது ஒரு லிங்கம்.

லிங்கத்துடன் தொடர்புடைய மேற்கண்ட திருமேனிகள் அனைத்தும் மேன்மையானவை. லிங்கத் துடன் தொடர்புடையவர்கள் அனைவரும் சிவன்மீது ஆழ்ந்த பக்தியும், சைவத்தின்மீது உயர்ந்த பற்றும் கொண்டவர்கள் என்பது கருத்து.

### 9. லிங்கத்துள் லிங்கம்

லிங்கத்தில் லிங்கம் இருப்பதும், உருவத் திருமேனிகளில் லிங்கம் இருப்பதும், லிங்கத்துள் லிங்கம் இருப்பதும் தனித்தனி அழகுடையன.

செங்குன்றம் திருவள்ளூர் சாலையில் தாமரைப் பாக்கம் என்ற திருத்தலத்தில், விஸ்வரூப லிங்க வடி வத்தில் பிரம்மாண்டமான ஒரு கோயில் உள்ளது. லிங்க தரிசனம் மிகத்தூரத்திலிருந்தே கிடைக்கின்றது. இந்த லிங்க வடிவக்கோயிலின் கருவறையில் ஒரு லிங்கம் திகழ்கின்றது. லிங்கத்துள் லிங்கம். கோயிலின் புறமும் அகமும் லிங்க வடிவங்களே. எனவே, எங்கும் நிறைந் திருப்பது இறைமையே.

★★★

# அழகுக்கு மறுபெயர் முருகன்

- டாக்டர் கிருஷ்ணவேணி அருணாசலம்

''அழகென்ற சொல்லுக்கு முருகா - உந்தன்
அருளன்றி உலகிலே பொருளேது முருகா!''

என்கிற இசைப்பாடல் ஒன்றுண்டு. முருகன் என்றாலே அழகன் என்றுதான் பொருள். நாம் வழிபடுகின்ற தெய்வங்களில் முருகப்பெருமானுக்கு மட்டும் தனிச் சிறப்பும், அளவற்ற பெருமையும் உண்டு. ஆறுமுகன் என்றழைக்கப்படுகின்ற அவனுடைய ஒவ்வொரு முகத்திற்கும் தனியழகு உண்டு. கந்தன், கார்த்திகேயன் என்று அடியவர்கள் மனமுருகிப் பாடுகின்ற அவனுடைய அழகின் சிறப்பை இக்கட்டுரையில் காண்போம்.

## அழகு

அழகு என்பது வெறும் உடல் கவர்ச்சி அல்ல! காரணம், இந்த உடல் நிலையில்லாதது; அழியக் கூடியது. ''வெறும் தலைமுடியழகும், பார்ப்பவர் கண்ணைக் கவரும் மார்பின் அழகும், நகத்தின் அழகும், தூய்மையான பற்களின் அழகும் சேர்ந்த இந்த உடலழகானது உண்மையான அழகல்ல'' என்று ''சிறுபஞ்சமூலம்'' என்னும் நூல் கூறுகின்றது. நான்மறைகளும் இவ்வுடலினை வெறும் 'மாயை' என்றுதான் குறிப்பிடுகின்றன. ஆகவே உண்மையான அழகு என்பது உள்ளத்தின் அழகுதான். உள்ளத்தின் அழகை வைத்து தான் உடலழகைப் போற்றமுடியும். ''அகத்தின் அழகு முகத்தில் தெரியும்'' என்கிற பழமொழி இந்தக் கருத்தை யொட்டி எழுந்த பழமொழியாகும்.

தமிழ்த் தென்றல் திரு வி.க. அவர்கள் தம்முடைய ''முருகன் அல்லது அழகு'' என்கிற நூலில், ''முருகு'' என்பதற்கு இளமை, அழகு, வீரம் எனப் பலபொருள் கூறுகிறார்.

அழகு என்பது செயற்கையாய்ச் செய்யப்படுவதன்று. அது இயற்கையாகவே அமைவதாகும். ஆறுகளையும், மலைகளையும், அடர்ந்த சோலைகளையும் இயற்கையழகுக்கு உதாரணமாகக் கூறலாம்.

அழகுக்கு முழு விளக்கமாய் திகழ்பவன் முருகன். அவன் அழகினை,

''கை புனைந்தியற்றாக் கவின் பெறும் வனப்பு''

என்று திருமுருகாற்றுப்படை கூறுகின்றது. இத்தகைய அழகினை எப்படிப் பெறுவது? அழகு நிலையங்களுக்குச் சென்று இவ்வழகை அடைய முடியுமா? முடியாது. நல்ல நடத்தையும், புன்சிரிப்பும், இயற்கையான உணவும், நல்வாழ்வும் அமையப் பெற்றால் அதன் மூலம் பெறும் மகிழ்வில் அவ்வழகை அனுபவிக்கலாம்.

## முருகனின் அழகு

முருகனின் தாயான பார்வதிக்கு வடிவுடையம்மன் என்கிற பெயருண்டு. அத்தகைய அனைத்து அழகுகளும் பொருந்திய சக்தியின் மைந்தனான முருகனின் அழகைப் பற்றி சொல்லவா வேண்டும்? ''தாயைப் போல பிள்ளை'' என்பது பழமொழியல்லவா! அவனுடைய ஆறுமுகங்களும் அழகு முகங்கள்தானே! அந்த ஆறு முகத்தின் அழகில் திளைத்த அருணகிரிநாதர்,


''ஏறுமயில் ஏறிவிளையாடும் முகம் ஒன்று
ஈசருடன் ஞானமொழி பேசும் முகம் ஒன்று
கூறும் அடியார்கள் வினை தீர்க்கும் முகம் ஒன்று
குன்றுருவ வேல் வாங்கி நின்ற முகம் ஒன்று
மாறுபடு சூரரை வதைத்த முகம் ஒன்று
வள்ளியை மணம் புணர வந்த முகம் ஒன்று''

என்று ஆறுமுகத்தின் அழகினைப் பற்றி பாடி மகிழ்கிறார். அருளழகு, கல்வியழகு, கொடையழகு, புகழ் அழகு, வீர அழகு, அன்பழகு என்கிற அத்தனை அழகுகளும் அவனுடைய முகத்திலே வீற்றிருப்பதாய் அருணகிரிநாதர் ஆனந்தக் கூத்தாடுகின்றார்.

நாம் ஆலயங்களில் வழிபடும் ஆண் மற்றும் பெண் தெய்வங்களின் முகத்தில் காணமுடியாத ஓர் அழகினை முருகனின் முகத்தில் காணலாம். தந்தையாகிய சிவபெருமானின் கம்பீரத்தையும், தாய் பார்வதியின் கருணையும் கலந்த அழகை முருகனின் முகத்தைத் தவிர வேறெங்கும் காண முடியாது.

**கந்தர் சஷ்டி கவச நூலில்**

அடியேன் வதனம் அழகுவேல் காக்க!
பேசிய வாய்தனை பெரு வேல் காக்க!
முப்பத்து இருபல் முனைவேல் காக்க!
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க!
கன்னம் இரண்டும் கதிர்வேல் காக்க!



என்று கூறப்பட்ட திருமந்திரத்தில் வதனம் காக்க அழகுவேல் குறிப்பிடப்படுகிறது.

வதன அழகுக்கு சில குறிப்புகள் உண்டு. மேல் முகம், நடுமுகம், கீழ் முகம், முகத்தின் இரு கன்னங்கள் மற்றும் தலையில் முகம் அமைப்பு இவைகளின் விகிதாச்சாரத்தைக் கொண்டுதான், வதன அழகு காணப் படுகிறது. முக அழகு மட்டுமின்றி, வசீகரம், மற்றும் எழுச்சியான தோற்றம் அதனின் வீச்சுதான் அருள் பாலிப்பு ஆகும்.

மேற்கூறிய வதனம் அமைப்பு, அதன் அருள் வீச்சினை ஆய்வு செய்துள்ள பேராசிரியர் முகம் சீரமைப்பு நிபுணர் பேராசிரியர் கண்ணப்பன் அவர்கள் கூறுவதாவது : உருவமைப்பில் தான் பக்தி ஒருங் கிணைக்கப்பட முடியும். மனிதனின் உள்ளம், உவகை யுடன் ஒருங்கிணைக்கப்பட்டு ஆண்டவனை வழிபட வேண்டுமெனில், அந்த ஒருங்கிணைப்புக்கு அருள் பாலிக்கும் இறைவன் உருவம் தேவை. அதனில் முகம் முக்கிய பங்கு பெறுகிறது.

தத்துவ ரீதியாகவும், இயற்கையாகவும், மனித னுக்குத்தான் இறை உணர்வு உள்ளது. இறைவனைத் தன் உருவத்தில் காணும் போதுதான், மிரட்சியில்லாக் கருணையுள்ளம் கடவுளிடம் உள்ளது. கலாச்சாரம் மிகுதியின் அமைப்பில், உருவ வழிபாட்டில், அன்பு பரிமாணம் என்பது அழகுதோற்றம் இவைகளினால் தான், முருக வழிபாட்டினை ஏற்படுத்தியுள்ளார்கள். கூர்ந்து கவனித்து, சிந்தித்து சொல் வடிவத்தில், உள்ளம் சீர்பட்டு, பக்தியினை வெளிப்படுத்த, கருப்பொரு ளாக முருகன் முகம் அழகிய வதனமாக சிற்பிகளால் படைக்கப்பட்டது எனப் பேராசிரியர், முகம் சீரமைப்பு நிபுணர், டாக்டர் ஜே.ஜி. கண்ணப்பன் அவர்கள் தமது ஆய்வு கருத்தினைத் தெரிவிக்கிறார்.

## சிங்கார வேலவன்

வெற்றி வேல், வீர வேல் என்றழைக்கப்படுகிற முருகனின் வேலாயுதத்திற்கும் அழகு உண்டு. அதனால் தான் ''சிங்கார வேலவன்'' என்று முருகன் அழைக்கப் படுகிறான்.

முருகன் தன் கையிலே ஏந்தியிருக்கின்ற வேலானது சக்தி வாய்ந்தது. என்றும் அழியாதது, ''யாமிருக்கப் பயமேன்?'' என்று, உயர்ந்த மனத் துணிவை வேல் பக்தர்களுக்குக் கொடுக்கின்றது.

''திருப்புகழைப் பாடப்பாட வாய் மணக்கும்
எதிர்ப்பவரை முருகா உன் வேல் தடுக்கும்''

என்ற திரை இசைப்பாடலின் பொருளுக்கேற்ப முருகனின் வேலானது பக்தர்களை எல்லாவிதமான பயங்களிலிருந்தும், பாவங்களிலிருந்தும் காத்து நிற்கிறது.

### வீர அழகும் நெஞ்சின் ஈர அழகும்

தேவேந்திரனையும், தேவர்களின் கூட்டத்தையும் காப்பதற்காக அவதரித்தவன் முருகன். தன்னுடைய சக்திவாய்ந்த வேலினால் அசுரர்களோடு போர் பரிந்து, அவர்களை அழித்து தேவர்களைக் காத்ததினால் அவனுடைய வீர அழகு புலப்படுகின்றது.

மேலும், அசுரர் கூட்டத்தலைவன் சூரபத்மனை இருகூறாகப் பிளந்ததோடு, அவனை மயிலாகவும், சேவற்கொடியாகவும் மாற்றி அருளியது முருகனின் கருணையின் ஈரத்தின் அழகிற்கு எடுத்துக்காட்டாகும். பகைவனுக்கும் அருளிய அவன் நெஞ்சின் ஈரஅழகு போற்றி மகிழத்தக்கதாகும்.

### தமிழ்க் கடவுள்

குன்றிருக்கும் இடமெல்லாம் வீற்றிருந்து அடியவர்களின் மனதை ஆட்சி புரிந்து வருகின்ற முருகன் குறிஞ்சிநிலக் கடவுளாய் வணங்கப் பெற்றான். தமிழ்க்கடவுள் என்று சொல்லத்தக்க தகுதி அவனுக்கு மட்டுமே உண்டு. புலவர் நக்கீரரையும், புகழ் கொண்ட அருணகிரிநாதரையும் ''கவி சொல்'' என்று அடியெடுத்துக் கொடுத்தவன் அவனே.

''முத்தமிழால் வைதாரையும்
வாழ வைப்பவன்''

என்று அடியவர்களுக்குத் தம் தமிழ்ப்பற்றை முருகன் வெளிப்படுத்துகிறான்.

### கந்தனும் கல்வியழகும்

கல்வியானது கரையில்லாதது, காலத்தால் அழியாதது. ''கற்றது கை மண்ணளவு - கல்லாதது உலகளவு'' என்பதும், கல்வியழகே அழகு என்பதும் ஆன்றோரின் அமுதமொழிகள். முருகன் அனைத்துப் பொருள்களையும் கற்றறிந்தவனாய், தந்தைக்கே உபதேசம் செய்கின்ற தகுதியைப் பெற்றவனாய்த் திகழ்கிறான். பிரணவப் பொருளைத் தந்தைக்குப் போதித்ததால் ''தகப்பன் சுவாமி'' என்று போற்றி வணங்கப் பெறுகிறான். முழு முதற்கடவுளாகிய சிவபெருமானுக்கே கற்பிக்கின்ற முருகனின் கல்வியழகை என்னென்று புகழ்வது?

### தமிழும் முருகனும்

தமிழ்க் கடவுளாகிய முருகனுக்கும், தன்னிகரற்ற மொழியாகிய தமிழிற்கும் உள்ள தொடர்பானது வியத்தற்குரியது. அமிழ்தம் போன்ற உயிரெழுத்துக்களின் எண்ணிக்கை பன்னிரண்டு, முருகனின் அழகான கருவிழியும் பன்னிரண்டுதான். ஈராறு கரத்தோடு ஒராறு முகத்தைச் சேர்த்தால் வருகின்ற எண்ணிக்கை பதினெட்டு. மெய்யெழுத்துக்களின் எண்ணிக்கையும் பதினெட்டுதான். தமிழின் ஆயுதமாய்த் திகழுகின்ற ஒரே எழுத்து ஃ. அதே போல் முருகன் கையில் ஏந்திக் கொண்டிருப்பது ஒரேயொரு வெற்றி வேல்தான். மேலும், ''முருகு'' என்ற வார்த்தையில் வல்லினம், மெல்லினம், இடையினம் என்ற மூன்று இன்ங்களும் பயின்று வரக் காணலாம். தமிழையும் முருகனையும் தனித்தனியே பிரித்துப் பார்க்க முடியாது. அதனால்தான் தமிழ்க்கவிஞர்கள்,

''உனைப்பாடும் தொழிலன்றி வேறில்லை
எனைக் காக்க உனையன்றி யாருமில்லை''

என்று முருகனைப் போற்றிப் பாடுகிறார்கள். தமிழிற்கும் முருகனுக்கும் உள்ள உறவை எண்ணும்போது அந்த மொழியானது ''தெய்வீக மொழி'' என்று அழைக்கப் பெறுவது எவ்வளவு உண்மை என்பது விளங்கும்.

### முருக வழிபாடு

''முருகன் ஒரு நாட்டினருக்கோ, குறிப்பிட்ட சமயத்திற்கோ மட்டும் தெய்வமல்ல, அவன் உலகிற்கே தெய்வம்'' என்கிறார் திரு.வி.க., முருகன் எல்லா கடவுளருக்கும், அனைத்துச் சமயங்களுக்கும் பொதுவானவன். அவனுக்கு விநாயகன் அண்ணன், கண்ணன் மாமன், தாய் சக்தி, தந்தை சிவ பெருமான்.

தாயாகிய பார்வதியிடமிருந்து அவன் அழகைப் பெற்றிருக்கிறான். அழகிற்குரிய அத்தனை அடையாளங்களும் முருகனிடம் அமைந்துள்ளன.

''அழகுடன் விளங்குவன வெல்லாம் ஆறுமுகனின் தோற்றம்
சுகமளிப்பவை எல்லாம் சுப்ரமணியம்
வீரம்பொருந்தியவை எல்லாம் வெற்றி வேலனின் விளையாட்டு''

என்ற தமிழ்ப்பாடல் முருகனின் பெருமைகளைக் குறிப்பிடுகின்றது.

''கம்பை முருகன் பிள்ளைத்தமிழ்'' என்னும் இலக்கியத்தில் முருகப்பெருமானின் அழகு சித்தரிக்கப் பட்டிருக்கின்றது. பிள்ளைத்தமிழ் என்பது வழிபடும் தெய்வங்களையோ, ஆதரித்த வள்ளல்களையோ



குழந்தையாகக் கருதி, அக்குழந்தையின் மூன்றாம் மாதம் முதல் இருபத்தோராம் மாதம் வரையில் அமைந்த கால அளவினை பத்துப் பருவங்களாகப் பிரித்துப் பாடுவதாகும்.

காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வருகை, அம்புலி, சிற்றில் சிதைத்தல், சிறுபறை முழக்கல், சிறுதேர் உருட்டல் என்பவையே ஆண்பாற் பிள்ளைக்குரிய பத்துப் பருவங்களாகும்.

கம்பை முருகன் பிள்ளைத்தமிழில் முருகப் பெருமானின் பத்துப் பருவங்களும் கவிநயம் சொட்ட பாடப்பட்டிருக்கின்றன. பத்துப் பருவங்களுள் ''அம்புலிப் பருவம்'' என்பது நிலவைக் குழந்தையுடன் விளையாட வருமாறு அழைக்கும் பருவமாகும். கம்பை முருகன் பிள்ளைத்தமிழில் அம்புலிப் பருவத்திற்குரிய பாடலில் முருகனின் வேறுபட்ட அழகும், அதனைக் கண்டு மயங்குகின்ற கடவுளரைப் பற்றிய செய்திகளும் கூறப் பட்டுள்ளன.

தாமரை மலரிலே வீற்றிருக்கின்ற திருமகள் முருகனின் முகத்தழகைக் காண்கிறாள்; கலைமகளோ அவனுடைய சொல்லழகைக் கேட்டு மகிழ்கிறாள்; சிவபெருமானோ அவனுடைய அறிவழகை வியந்து நோக்குகிறான்; கண்ணனோ அவன் கண்ணழகைக் கண்டு இரசிக்கிறான்; நான்முகனோ முருகனின் ஈராறு கரத்தழகைக் கண்டு திகைக்கிறான். தேவர்களின் தலைவன் இந்திரன் முருகனின் வேலழகையும், இந்திராணி தேவர்களைக் காத்த முருகனின் தோள ழகையும் கண்டு வணங்குகிறார்கள். அவனுடைய அடியவர்கள் முருகனுடைய திருவடியழகைப் பணிந்து துதிக்கிறார்கள். இந்தச் செய்திகளைக் கீழ்காணும் பாடல் உணர்த்துகின்றது.

''கமல மடமங்கை வதனத்தழகு காண்பாள் -
அக்கரிய முகில்
வண்ணனும் செங்கண்ணழகு காண்பான் - வளர்
கலைவாணி சொல்லழகு காண்பாள் -
முக்கண் தாதையன்
விமலமுரு சொற்பொருளின் அழகு காண்பான்
விதிவியன் கரத்தழகு காண்பான்
வீரத் தோளழகு இந்திராணி காண்பாள் - உம்பர்
வேந்து வேலழகு காண்பான்
நிமல மன அடியார் அடியழகு காண்பார்
கௌரி நின்ற பின்னழகு காண்பாள் - நின்னொத்த
ஆதித்தன் வடிவழகு காண்பான், ஒரு
நீயும வருடன் குழுமியே
அம்புலி தடங்குலவு கம்பைவளர் கந்தனுடன்
அம்புலி விளையாட வாவா''


- கம்பை முருகன் பிள்ளைத் தமிழ்

அடியவர்களின் துயர் தீர்த்து வேலோடும் மயிலோடும் வீற்றிருக்கும் குமரக் கடவுளின் அழகை குவலயத்திற்கு எடுத்துச் சொல்வோமாக. அவன் சிறப்பை இயலாகவும், இசையாகவும், நாடகமாகவும் நடத்தி அவன் வரலாற்றை முழங்குவோமாக!... முருக னுக்கு அழகு மயில் எவ்வாறு வாகனமாக அமைந்தது என்பதையும், அவன் கொடியிலே அழகு சேவல் எவ் வாறு சேர்ந்தது என்பதையும் இத்தகைய கலைகளின் மூலம் விளக்கினால்தான் அவை மக்கள் மனதில் ஆழப்பதியும், அழகுக்கு மறுபெயராய்த் திகழுகின்ற முருகனின் பெருமையை உலகுக்கெல்லாம் கூறி அவன் அருளைப் பெறுவோமாக!... A thing of beauty is joy for ever என்று கவிஞர் கீட்ஸ் கூறியது போல அபயகரம் நீட்டி நம்மை ஆதரிக்கும் முருகவேளின் அழகு பிம்பம் நம்மை என்றென்றும் மகிழ்ச்சி வெள்ளத் தில் ஆழ்த்த வல்லதன்றோ!

★★★

# வாழவைக்கும் எங்கள் முத்துமாரி!

- திருமதி உமா சுப்பிரமணியன், மடிப்பாக்கம்



அருள்மாரி பொழிகின்ற கருமாரி
உருமாறி வருகின்ற மகமாயி
விழிமாரி துடைக்கின்ற எம்தாயே!
கவிமாரி பொழிந்திட அருள்வாயே!

(பல்லவி)

ஆடி மாதம் அம்மனுக்கு
கூழ் ஊற்றுவோம்
தேடி வரும் நன்மைகளே
நாம் போற்றுவோம் (ஆடி)

(சரணம்)

வேம்பு இலை ஆடைகட்டி
கையிலிரு தீச்சட்டி
ஏந்தி வந்து தாயவளை
போற்றிப் பாடுவோம்
எலுமிச்சை விளக்கேற்றி
நாம் துதிப்போம்
அன்னை இடும் பிச்சை எது
ஏற்று மகிழுவோம்
எங்கும் நிறைந்தவளைப்
போற்றி மகிழுவோம். (ஆடி)

இளநீரை உனக்கு வைத்தோம் தாயே!
குடித்து எங்கள் குறை தீர்ப்பாய் தாயே!
வீட்டு வாசலுக்கு வருவாய் அம்மா
வார்க்கும் கூழை நீ பெறுவாய் அம்மா
கூழ் குடித்த வாயாலே தாயேஎங்கள்
குலம் வாழ அருள் வாயே தாயே! (ஆடி)

பசிதீர்த்து பிணிதீர்த்துப்
பயணத்தில் எமைக் காத்து
வாழ வைக்கும் எங்கள் முத்துமாரி
தக்கதுணை நீ தானே தேவி!
சூழ்ச்சிகளை தூசியாக்க
சூலமெடுப்பாய்
வேதனையை வீழ்த்திடவே
விழிகள் திறப்பாய்
கருணைதெய்வம் நீதானே தாயே!
எந்நாளும் துணைவருவாய் நீயே! (ஆடி)

★★★

# "அதுவே அதுவானது"

-"ஆன்மசக்தி" பி. வெங்கடேசன்

அன்றலர்ந்த மலர்களில் மணமுள்ளவை உண்டு. மணமற்றவைகளும் உண்டு. மணமுள்ள நல்ல மலர்களைத்தான் மாலைகளாகத் தொடுத்து இறைவனுக்குச் சூட்டி வழிபடுகின்றோம். உண்மையில் இம் மலர்கள் அப்போதைக்குத்தான் புது மலரே தவிர அதன்பின்பு வாடிவதங்கிவிடும் தன்மையுள்ளவை என்பது யாவரும் அறிந்ததேயாகும். பூக்காட்டிலிருந்து மிதந்து வரும் பூமணத்தை இயற்கைமணம் என்போம். அது இயற்கையின் அருட்கொடைதான் என்றாலும் நமது வள்ளற்பெருமானார் இயற்கை மணம் என்பதை என்றும் வாடாது அருள்மணம் பரப்பிக் கொண்டிருக்கும் தெய்வ மலர்களையே குறிப்பிடுகின்றார். என்றும் வாடாத பாமாலை சூட்டிய பெருமானார் இயற்கை மணம் என்பது இற் பூத மணம் (விடய வாசனைகள் என்றும் இந்திரிய தத்துவங்களின் செயற்பாடுகள் என்றும் கூறுவர்) அல்ல என்றும் விழிப்பு அனுபவத்தின்போது பெறுகின்ற பொற்பூவின் நறுமணமே அது என்பதாக அனுபவ மாலையில் பெருமானார் அழகாகக் குறிப்பிடுகின்றார்.

அருள்பழுத்த அனுபவத்தால் அருட்பிரகாசப் பெருமான் முத்தேக சித்தி (சுத்த தேகம், பிரணவ தேகம், ஞான தேகம்) பெற்றார் என்பதையும் இப்பெரு நிலையினைப் பெருமானார் இறையருளை வேண்டித் தான் பெற்றார் என்பதையும்,

''காற்றாலே புவியாலே ககனமத னாலே
கனலாலே புனலாலே கதிராதி யாலே
கூற்றாலே பிணியாலே கொலைக்கருவி யாலே
கோளாலே பிறஇயற்றுங் கொடுஞ்செயல் களாலே
வேற்றாலே எஞ்ஞான்றும் அழியாதே விளங்கும்
மெய்யளிக்க வேண்டும் என்றேன்
விரைந்தளித்தான் எனக்கே
ஏற்றாலோ இழிவென நீர் நினையாதீர் உலகீர்
எந்தையருட் பெருஞ்சோதி இறைவனைச்
சார்வீரே.!''

என்ற திருவருட்பா பாடலையுணர்ந்து நீங்களும் (சன்மார்க்க அன்பர்கள்) இறைவனைச் சார்ந்திருந்தால் இப்பெருநிலையைப் பெற முடியும் எனக் கூறுகின்றார்.

பேசுதல், எழுதுதல் என்பது நம்மில் பெரும்பாலோருக்கு கைவந்த கலையாகும். ஆனால் அனுபவத்தில் உணர்ந்ததை உணர்ந்தவாறு வெளிப்படுத்துதல் என்பது ஒரு சிலரால்தான் முடிகின்றது. அதிலும் 'அருள்ஒளி' அனுபவம் அரிதானது. மகத்தானது. அது கல்லாதவரையும் கற்ற மேதையாக்கி, சன்மார்க்கத்தின் உட்பொருளைக் காட்டி அதனையும் கடந்த சுத்த சன்மார்க்கத்தைக் காட்டி, அதற்கும் அப்பால் பேரருள் பெருநிலையினையும் காட்டிடும் வல்லமையுடையது என்பதனை வள்ளற்பெருமானின் அருட்பாடல்களும் அவருடைய வாழ்க்கை வரலாறும் நமக்கு உணர்த்துகின்றன.

பரஉலகம் என்று தனியாக ஒரு உலகம் விண்வெளியில் சுழன்று கொண்டிருப்பது போலவும், இப்பூத உடல் நீங்கிய பின்பு அங்கே சென்று சூக்கும நல்லுடலோடு இன்பமாக வாழலாம் என்று அருள் நிலை அறியாதார் ஆங்காங்கே அமர்ந்துகொண்டு பொழுதுபோக்காகப் பேசுவதுண்டு. இகத்தே எனும் இங்கே - இவ்வுலக வாழ்க்கையிலேயே - இவ்வுடம்பினுள்ளேயே பரம்பொருள் அருள் இன்பத்தைப் பெற்றுப் பெருவாழ்வு வாழமுடியும் என்பதை எடுத்துக்காட்டும் திருவருட்பா பாடல்கள் நிரம்ப உண்டு. இந் நந்நிலையினைப் பெறவதற்கு வேண்டிய முதல் முக்கிய சாதனம் சன்மார்க்கத்தையும் அதற்குரிய சாதனையையும் இடைவிடாமல் கடைப்பிடித்தல் என்பதுதான். சாகாதவரை சன்மார்க்கி எனவும், சாகாக் கல்வியே சன்மார்க்க கல்வி எனவும் தெளிதல் வேண்டும்.

இத்தகைய சீரான நடைமுறைகள்தான் ஒரு மனிதனை சுத்த சன்மார்க்கப் பெருநிலையில் கொண்டு போய் நிறுத்தும் என்பதை திருவருட்பா பாடல்களிலும், உரை நடையிலும் பார்க்கலாம். சுத்த சன்மார்க்க நெறியில் காலூன்றியவர்கள் இந்திரிய ஒழுக்கம், கரண ஒழுக்கம், ஜீவஒழுக்கம், ஆன்ம ஒழுக்கம் எனப் பெருமானார் குறிப்பிடும் நால்வகை ஒழுக்க நெறிகளிலும் சிறந்தவராகவும், சாதி, மத, சமய ஆச்சார, சங்கற்ப விகற்பங்களையெல்லாம் கடந்தவர்களாகவும் திகழ்வார்கள்.

எனவே, அவர்களுடைய ஞானவுடலும், ஞானவுணர்வும், ஞான அறிவும் தெய்வ அருள்

மணத்தைப் பரப்பிக் கொண்டேயிருக்கும் என்பதில் ஐயமில்லை. இக் கருத்து பொதிந்த அருள்மணங் கமழும் அனுபவமாலைப் பாடலைப் படித்துச் சுவைத்து சிந்தித்து உணர்ந்தாலே பெருவாழ்வுக்குரிய பெருவழிப் பாதையை தொட்டுவிடலாமோ என்ற ஒரு ஆசை மனதில் துளிர்விடுகின்றது.

''கற்பூரம் மணக்கின்ற தென்னுடம்பு முழுதும்
கணவர் திருமேனியிலே கலந்தமணம் அதுதான்
இப்பூத மணம்போல மறைவதன்று கண்டாய்
இயற்கைமணம் துரியநிறை இறைவடிவத் துளதே
பொற்பூவும் நறுமணமும் கண்டறியார் உலகர்
புண்ணியனார் திருவடியில் நண்ணியவா றதுவே
நற்பூதி அணிந்ததிரு வடிவு முற்றும் தோழி
நான்கண்டேன் நான்புணர்ந்தேன் நான்
அதுவானேனே''


பெருமானவர்கள் துரிய நிலையில் இயற்கை அனுபவம் பெற்ற பின்பு கற்பூரப் பக்குவம் அடைந்தார். கற்பூரப் புனிதர்மேல் அருள்ஒளி படர்ந்தவுடன் அவருடைய உணர்வில், அறிவில், மனதில், வாக்கில், உடலில் அருள்மணம் பரவத் தொடங்கிவிட்டது. இதனைக் ''கற்பூரம் மணக்கின்றது என் உடம்பு முழுதும் கணவர் திருமேனியிலே கலந்தமணம் அதுவே'' என வள்ளற்பெருமானார் குறிப்பிடுகின்றார். தன்னை நாயகியாகவும் அருட்சோதி ஆண்டவரை நாயகராகவும் பாவித்து பெருமானார் பாடிய பாடல்கள் நிரம்ப வுண்டு.

அதில் ''கற்பூரம்'' என்ற வார்த்தையை இறைவனுடைய அழகிய திருவடிக்கு கண்ணேறு கழிப்பதற்காகவும் பயன்படுத்துகிறார். இக்கற்பூரக் கண்ணேறு கழித்தல் என்பது எவ்வுலகத்து எவ்வுயிர்க்கும் இனிது நலந்தரும் எனவும் கூறுகின்றார்.

''சித்த நிர்விகற்பம் சேர்ந்தார் உடல்தீபம்
வைத்த கற்பூரம்போல் வயங்கும் பராபரமே''

என்ற தாயுமானப் பெருமானின் பராபரக்கண்ணிப் பாடல் ஈண்டு சிந்திக்கத்தக்கதாகும்.

மேற்கண்ட அனுபவமாலைப் பாடலின் கடைசி வரியில் வருகின்ற ''நான் கண்டேன், நான் புணர்ந்தேன், நான் அதுஆனேனே'' என்ற வார்த்தைகள் ஆழ்ந்த அனுபவ ஆய்வுக்குரியவையாகும். ''நான் கண்டேன்'' எனப் பெருமான் கூறியிருப்பது ஆணிப் பொன் அம்பலத்தில் கண்ட அற்புதக் காட்சியாகும். கண்டது புறத்திலா - அகத்திலா எனில் ஐயமின்றி அக அனுபவம்தான். ''சத்திய ஞானசபை என்னுள் கண்டனன், சன்மார்க்க சித்தியை நான் பெற்றுக்



கொண்டனன்'' என்பது அற்புதம் என்ற தலைப்பில் வரும் அற்புதப் பாடலாகும். இவ்வற்புத நிகழ்ச்சியின் இயக்குநர் அருட்சோதி ஆண்டவரேயன்றி வேறு எவருமல்லர். ''உன்னால் உன்னைக் காண்பதல்லால் என் அறிவால் காணப்போமோ'' என்றார் ஒரு பெரியார், ''பாட்டுவித்தான் பாடுகின்றேன் - பணிவித்தால் பணிகின்றேன் பதியே நின்னை கூட்டுவித்தால் கூடுகின்றேன்'' இங்கேயும் பெருமானார் ''நான் கண்டேன்'' என்றார்.

இதற்கு ''ஓங்காரத் திருமேனியைக் கண்டேன் - அருட் திருமேனியைக் கண்டேன் - ஒளித் திருமேனியைக் கண்டேன்'' என்று பொருள் கொள்வதே பொருத்தமுடையதாகும். அருள்ஞானிகளைப் பொறுத்தவரை ''கண்டேன்'' என்று கூறுவதில் வியப்பொன்றுமில்லை. ''ககனத் திருமேனியைக் கண்டன கண்களே'' எனத் தாயுமானப் பெருமானும் கூறியுள்ளார்.

ஆனால், நமது வள்ளற்பெருமானார் ''கண்டேன்'' என்ற அளவோடு நிற்கவில்லை. ''கலந்தேன்'' என்றும், ''அதுவானேன்'' என்றும் தொடர்கின்றார். ஆம், ''கண்டேன்'' என்பதில் ''அ'' கரத்தைச் சேர்க்கிறார். ''கலந்தேன்'' என்பதில் ''உ'' கரத்தைக் கூட்டுகிறார். ''அதுவானேன்'' என்பதில் ''ம'' கரத்தை இணைக்கிறார். அகர, உகர, மகரம் மூன்றும் ஒன்றான ஓங்கார ஒளியில் மூழ்கி அத்துவிதப் பெருநிலையை அடைந்தார் என்பது தான் அற்புதத்திலும் அற்புதமான அருள் அற்புதமாகும்.

★★★

# காப்பதும், கொடுப்பதும் மந்திரமே

- கவிஞர் சொ. பொ. சொக்கலிங்கம்



மந்திரம் ஆவது இறைநாமம்
மாந்தரின் மனத்துயர் துடைத்திடுமே
மந்திரம் எழுத்தாய் மலர்ந்திடவே
மனக்கண் காணப் பலித்திடுமே
மந்திரம் ஒலியாய் மாறிடவே
மாந்தரின் ஆத்மா மகிழ்நதிடுமே
மந்திரம் ஒலித்திடும் மனமெல்லாம்,
மகேசன் உறைய மணம்மிகுமே! (1)

அறிவும், அன்பும் ஒன்றிடவே,
அடித்தளம் அமைப்பது மந்திரம்தான்
நெறியும், முறையும் நிரம்பிடவே,
நேர்மையை வளர்த்திடும் மந்திரம்தான்
இறைவனின் உருவைக் கண்டிடவே,
எழுத்தாய் மலர்ந்தது மந்திரம்தான்,
இறைவனின் பேச்சைக் கேட்டிடவே,
எழுந்தது ஒலியாய் மந்திரம்தான். (2)

வெற்றியைத் தந்திடும் மந்திரமே,
வினைகளைப் போக்கிடும் மந்திரமே,
முற்றிலும் நோய்நொடி தீர்த்திடுமே,
முடிவிலா இன்பம் தந்திடுமே,
கற்றிடக் கற்றிட மந்திரமே,
கல்வியும், செல்வமும் சேர்த்திடுமே,
பற்றுடன் பலமுறை ஓதிடவே
பல பல நலன்களைத் தந்திடுமே. (3)

உடலும், மனமும் ஒன்றிடவே,
ஓர்வழி காட்டிடும் மந்திரமே
படரும் ஆசையால் மனமும் தான்
பதைப்பதைத் தடுப்பது மந்திரமே,
இடர்களை நீக்கிடும் மந்திரமே
இனிமையைப் பெருக்கிடும் மந்திரமே
கடவுளைக் காட்டிடும் மந்திரமே
காப்பதும், கொடுப்பதும் மந்திரமே. (4)

★★★

# பூலோக வைகுண்ட – கைலாசம்

- தமிழ்தீபம் எஸ். வெங்கடாசலம், மும்பை

தமிழ் பரப்ப தென்திசையில் குறுமுனி தங்கிய இடம் கருணைமொழி பொருணை நதியின் பிறப்பிடமாகும். இது தென்பாண்டி நாட்டில் உள்ளது. வட தமிழ்நாட்டிலுள்ள தில்லையம்பதியில் களிநடம் புரியும் கூத்த பிரானை ''தென்பாண்டி நாட்டானே!'' என்று விளிக்கிறார் மணிவாசகர். அந்தத் தென்பாண்டி நாடு பல பெருமைகளைத் தன்னுள் அடக்கி வைத்திருக்கிறது. அதில் சிகரமாய் அமைந்தது ஸ்ரீவைகுண்டம் என்ற திருப்பதி. அந்த திவ்ய தேசத்தின் ஒரு பகுதிதான் கைலாசபுரம் என்ற சைவர் வாழ் பகுதி. இந்த ஊர் வைகுண்டத்தையும் கைலாசத்தையும் இணைத்துள்ள ஒரு சமத்துவபுரம் என்று சொல்லலாம். இந்த பூலோக வைகுண்ட-கைலாசம் பதியானது திருநெல்வேலியிலிருந்து திருச்செந்தூர் செல்லும் பாதையில் பதினாறாவது கல்தொலைவில் பொருணை ஆற்றின் கரையில் பொலிவுடன் காட்சியளிக்கின்றது. தாமிரபருணி ஆறு நெல்லை மாவட்டத்தில் உற்பத்தியாகி நெல்லை மாவட்டத்திலேயே கடலுடன் சங்கமம் ஆவது ஒரு தனிச்சிறப்பு. இச்சிறப்பு வேறு எந்த நதிக்கோ அல்லது மாவட்டத்திற்கோ கிட்டியதில்லை. இந்த ஆற்றின் உற்பத்திஸ்தானமும் சங்கமஸ்தானமும் சிவஸ்தலங்களே. இந்த நதியின் நீளம் எழுபது மைல்தான்.

ஸ்ரீவைகுண்டம் என்று சொன்ன மாத்திரத்திலே இது நவதிருப்பதி (வைணவம்) நவகைலாசம் (சைவம்) சார்ந்த ஒரு தெய்வீகத் திருத்தலம் என்ற எண்ணம் நம்முள் எழுகின்றது. நவதிருப்பதியும், நவகைலாயமும் தாமிரபரணி ஆற்றின்கரையில் அமைந்த புண்ணிய க்ஷேத்திரங்களாகும். வைகுண்டமும், கைலாசமும் ஒருங்கே சங்கமித்த ஸ்ரீவைகுண்டம் என்ற புண்ணிய பூமியின் மகாத்மியத்தை சைவக் கண்ணோடும், வைணவக் கண்ணோடும்-தனித்தனியே காண்போம். முதன்முதலில் நவகைலாசம் என்றழைக்கப்படுகின்ற ஒன்பது (சிவ) நவக்கிரஹத் தலங்களைப் பார்ப்போம்.

| | நவகைலாசத் தலம் | ஆட்சி புரியும் நவ கோள் |
|---|---|---|
| 1. | பாப நாசம் | சூரியன் |
| 2. | சேரன் மாதேவி | சந்திரன் |
| 3. | கோடகநல்லூர் | செவ்வாய் |
| 4. | குன்னத்தூர் (சங்காணி) | ராகு |
| 5. | முறப்ப நாடு | வியாழன் |
| 6. | ஸ்ரீவைகுண்டம் | சனி |
| 7. | தென் திருப்பேரை | புதன் |
| 8. | ராஜபதி | கேது |
| 9. | சேர்ந்த பூமங்கலம் | வெள்ளி |

இந்த நவகைலாசம் பொது மக்களையும் பக்தர்களையும் வெகுவாகக் கவரவில்லையென்றாலும் இதில் ஒன்றான சனி க்ஷேத்திரமான கைலாசபுரம் (இப்போது ஸ்ரீவைகுண்டம் என்ற நகரத்துள் ஒடுங்கி விட்டது) என்ற ஊரில் சுமார் 450 ஆண்டுகட்குமுன் சைவசமயத்தைச் சிறக்க காசி வரை சென்று அங்கும் தேவாரம் திருவாசகம் புகழ்பரப்பிய ஸ்ரீ ஆதிகுமர குருபர சுவாமிகள் அவதரித்தார் என்பதால் அந்த ஊர் மக்கள் பெருமைப்படுகின்றனர்.

ஸ்ரீவைகுண்டம் என்ற இந்த வைணவ க்ஷேத்திரம் சூரிய கிரஹத்தின் ஆட்சிக்கும் அருள்பாலிப்புக்கும் உட்பட்டதாகும். இங்கு எழுந்தருளியிருக்கும் வைகுண்டப் பெருமாளை நின்ற கோலத்தில் கண்குளிரக் கண்ட நம்மாழ்வார், இந்தப் பெருமாளோடு மேலும் பக்கத்திலுள்ள இரண்டு வைணவத் தலத்து இறைவரையும் இணைத்துத் தம் பாசுரத்தில் பாடியுள்ளார்.

> புளியங்குடியில் கிடந்து வரகுணமங்கையில் இருந்து
> வைகுண்டத்தில் நின்று......

என்று இறைவனை மூன்று நிலைகளிலும் கண்டு அனுபவித்து ஆனந்தம் கொள்கிறார். நாமும் ஆனந்தம் பெற இறைவனை இறைஞ்சுவோம்.

ஸ்ரீவைகுண்டத்தைத் தலையாகக் கொண்ட நவ (வைணவ) திருப்பதிகளையும் அவற்றின் நவ கோள் நாயகர்களையும் இப்போது பார்ப்போம்.

| | நவ திருப்பதித் தலம் | நவ கோள் நாயகர் |
|---|---|---|
| 1. | ஸ்ரீவைகுண்டம் | சூரியன் |
| 2. | ஸ்ரீ வரகுண மங்கை (நத்தம்) | சந்திரன் |
| 3. | திருப்புளியங்குடி | புதன் |
| 4. | திருக்குளந்தை (பெருங்குளம்) | சனி |
| 5,6. | தொலைவில்லி மங்கலம் என்ற இரட்டைத் திருப்பதிகள் | ராகு, கேது |

# கண்கண்ட தெய்வம் காளிகாம்பாள்

- முனைவர் த. அமிர்தலிங்கம்

கலியுகத்தில் அன்னை காளிகாம்பாள் நமக்குக்
கண்கண்ட தெய்வம் அன்றோ!
கண்பெற்ற புண்ணியம் அன்னையைக் காண்பது
பெருகிடும் செல்வம் அன்றோ!
(கலியுகத்தில்)

நிதிபதி செல்வ குபேரனும் அன்று
வழிபட்ட திருத்தலமே!
அதிபதி வான மகிபனும் நின்று
கைதொழும் திருத்தலமே!
கலைநிதி விஸ்வ கர்மா நன்று
பணிசெய்த அருள்தலமே!
இகபர சுகங்கள் யாவும் பெறஅருள்
புண்ணியஎழில் தலமே! (கலியுகத்தில்)

வீர சிவாஜி பக்தியில் வந்து
உருகிய திருத்தலமே!
மாகவி பாரதி பணிந்து வணங்கி
பாடிய அருள்தலமே!
ஆன்மீகத் தலைவர்கள், அரசியல் தலைவர்கள்
வணங்கிடும் திருத்தலமே!
கலைஞர்கள், புலவர்கள் அனுதினம் வந்து
கைதொழும் அருள்தலமே! (கலியுகத்)


மாதம் வைகாசியில் பிரம்மோற்சவம் அதில்
கிண்ணித்தேர் அற்புதமே!
மங்கலப் புரட்டாசியில் நவராத்திரி கலைவிழா
அற்புதம் அற்புதமே!
தைப்பொங்கல் முதல்நாளில் பூச்சொரி விழாதான்
சொல்லரும் அற்புதமே!
நாளும் திருநாளாம் அம்பாள் அருள்வாளாம்
வணங்கிட அற்புதமே
வணங்கிட அற்புதமே.

| | | |
|---|---|---|
| 7. | தென் திருப்பேரை | சுக்கிரன் |
| 8. | திருக்கோளூர் | செவ்வாய் |
| 9. | ஆழ்வார் திருநகரி | வியாழன் |

பன்னிரண்டு ஆழ்வார்களில் இரண்டு ஆழ்வார்கள் அவதரித்த தலங்கள் ஸ்ரீவைகுண்டத்தை அடுத்து அடுத்து உள்ள நவதிருப்பதித் தலங்களாகும். நம்மாழ்வார் அவதரித்த திருக்குருகூர் என்று சொல்லப்பட்ட ஆழ்வார் திருநகரி, ஸ்ரீவைகுண்டத்திலிருந்து மூன்று கல் தொலைவில் உள்ளது. ஆழ்வார்திருநகரியை அடுத்துள்ள திருக்கோளூரில் அவதரித்தவர் மதுரகவியாழ்வார். இவர் தம் குருவான நம்மாழ்வார் மீது பதினோரு பாடல்களைப் பாடியுள்ளார். இறைவனைப் பாடுவதை விடுத்து, தம் குருவை மட்டுமே பாடினாலும்கூட இவருடைய பாடல்கள் நாலாயிரத் திவ்ய பிரபந்தப் பாடலில் இடம் பெற்றுள்ளன என்றால் மதுரகவியாழ்வாரின் சிறப்புதான் என்னே! இவருக்கு இணை தேடவும் தரமாமோ?

நவதிருப்பதியிலும் நவகைலாசத்திலும் இடம் பெற்ற ஒரே ஊர் ஸ்ரீவைகுண்டம். இது வைகுண்டத்திற்கும் கைலாசத்திற்கும் இணை பாலமாக அமைந்திருக்கிறது என்ற கருத்தைக் கொண்டு இதனையே பூலோக வைகுண்ட-கைலாசம் என்று போற்றி வழிபடுவோம்.

★★★



மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் திருவேற்காட்டில் இந்துசமய அறநிலைய ஆட்சித்துறையின் சார்பில் 14.7.2002 அன்று 1008 இலவசத் திருமணங்களை மிகச் சிறப்பாக நடத்தி வைத்தார்கள். மாண்புமிகு இந்துசமய அறநிலைய ஆட்சித்துறை அமைச்சர் திருமிகு பி.சி. இராமசாமி அவர்கள் இத்திருமண விழாவிற்குத் தலைமைதாங்கினார்கள். அறநிலையத் துறையின் அரசுச் செயலாளர் திருமிகு பி.ஏ. இராமையா, இ.ஆ.ப. அவர்கள் வரவேற்புரை ஆற்றினார்கள். அறநிலையத்துறையின் சிறப்பு ஆணையர் மற்றும் ஆணையர் திருமிகு எம்.ஏ. கௌரிசங்கர் , இ.ஆ.ப. அவர்கள் நன்றியுரை ஆற்றினார்கள்.

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் திருவேற்காட்டில் இந்துசமய அறநிலைய ஆட்சித்துறையின் சார்பில் 14.7.2002 அன்று 1008 இலவசத் திருமணங்களை மிகச் சிறப்பாக நடத்தி வைத்தார்கள். மாண்புமிகு இந்துசமய அறநிலைய ஆட்சித்துறை அமைச்சர் திருமிகு பி.சி. இராமசாமி அவர்கள் இத்திருமண விழாவிற்குத் தலைமைதாங்கினார்கள். அறநிலையத் துறையின் அரசுச் செயலாளர் திருமிகு பி.ஏ. இராமையா, இ.ஆ.ப. அவர்கள் வரவேற்புரை ஆற்றினார்கள். அறநிலையத் துறையின் சிறப்பு ஆணையர் மற்றும் ஆணையர் திருமிகு எம்.ஏ. கௌரிசங்கர், இ.ஆ.ப. அவர்கள் நன்றியுரை ஆற்றினார்கள்.

வெளியிடுபவர் : ஆணையர், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, சென்னை – 600 034.
ஆசிரியர் : கவிஞர் டாக்டர் த. அமிர்தலிங்கம், எம்.ஏ.பி.எச்.டி.,
அச்சிட்டோர் : ***பாவை பிரிண்டர்ஸ் (பி) லிட்.***, 142, ஜானி ஜான் கான் தெரு, சென்னை – 600 014.

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் திருவேற்காட்டில் இந்துசமய அறநிலைய ஆட்சித்துறையின் சார்பில் 14.7.2002 அன்று 1008 இலவசத் திருமணங்களை மிகச் சிறப்பாக நடத்தி வைத்தார்கள். மாண்புமிகு இந்துசமய அறநிலைய ஆட்சித்துறை அமைச்சர் திருமிகு பி.சி. இராமசாமி அவர்கள் இத்திருமண விழாவிற்குத் தலைமைதாங்கினார்கள். அறநிலையத் துறையின் அரசுச் செயலாளர் திருமிகு பி.ஏ. இராமையா, இ.ஆ.ப. அவர்கள் வரவேற்புரை ஆற்றினார்கள். அறநிலையத்துறையின் சிறப்பு ஆணையர் மற்றும் ஆணையர் திருமிகு எம்.ஏ. கௌரிசங்கர் , இ.ஆ.ப. அவர்கள் நன்றியுரை ஆற்றினார்கள்.



மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் திருவேற்காட்டில் இந்துசமய அறநிலைய ஆட்சித்துறையின் சார்பில் 14.7.2002 அன்று 1008 இலவசத் திருமணங்களை மிகச் சிறப்பாக நடத்தி வைத்தார்கள். மாண்புமிகு இந்துசமய அறநிலைய ஆட்சித்துறை அமைச்சர் திருமிகு பி.சி. இராமசாமி அவர்கள் இத்திருமண விழாவிற்குத் தலைமைதாங்கினார்கள். அறநிலையத் துறையின் அரசுச் செயலாளர் திருமிகு பி.ஏ. இராமையா, இ.ஆ.ப. அவர்கள் வரவேற்புரை ஆற்றினார்கள். அறநிலையத் துறையின் சிறப்பு ஆணையர் மற்றும் ஆணையர் திரு ம்.ஏ. கௌரிசங்கர், இ.ஆ.ப. அவர்கள் நன்றியுரை ஆற்றினார்கள்.

வெளியிடுபவர் : ஆணையர், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, சென்னை - 600 034.
ஆசிரியர் : கவிஞர் டாக்டர் த. அமிர்தலிங்கம், எம்.ஏ.பி.எச்.டி.,
அச்சிட்டோர் : ***பாவை பிரிண்டர்ஸ் (பி) லிட்.,*** 142, ஜானி ஜான் கான் தெரு, சென்னை - 600 014.